விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 சுக்கில வரு மாசி மீ 09-ம் உ புதன்கிழமை (21 - 02 - 1990) ஹிஜ்ரி 1410 றஜப் 24 ஓசை 03

## கொழும்பில் கைதான தமிழ் இளைஞர்கள் விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு இணங்க கடந்த வாரம் கொழும்பில் கைது செய்யப்பட்ட அநேக தமிழ் இளைஞர்கள் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

கடந்த வாரம் கொழும்பில் ஆயுதங்களுடன் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்ட 200க்கும் மேற்பட்ட இளைஞர்களில் அநேகர் நேற்று மாலை கொழும்பில் விடுதலை செய்யப்பட்டனர். கொழும்பில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கும் இந்திய புலனாய்வுத் துறைக்கும் தொடர்புகள் உண்டென்றும், அவர்கள் அரசியற் தலைவர்களைக் கொலை செய்து கொழும்பில் பதட்டத்தை ஏற்படுத்த பணிக்கப்பட்டனர் எனவும் இலங்கைஅரசு குற்றம் சாட்டியிருந்தது. ஆனால் இதற்கு விடுதலைப் புலிகள் ஜனாதிபதியிடமும் பாதுகாப்புச் செயலாளரிடமும் கடும் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து இளைஞர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# பிரேமதாசா - மாத்தயா நாளை சந்தித்து பேச்சு

## அரசியல்சூழ் நிலைபற்றி முதன்முதல் நடக்கும் உயர்மட்டச் சந்திப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவரான மாத்தயா என்றழைக்கப்படும் திரு. மகேந்திரராஜா இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை நாளை வியாழக்கிழமை சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இரு தலைவர்களும் எந்த நேரம் எங்கே சந்திப்பார்களென்பது இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை உறுதி செய்யப்படவில்லை.

இச் சந்திப்பின்போது வடக்குக் கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றம், பாதுகாப்புப் படைகள் சம்பந்தமான விவகாரங்கள், மாகாணசபை பற்றிய பிரச்சினை, தேர்தல் பற்றிய விடயங்கள் தொடர்பாக பேசப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கருணாநிதியுடன் பேச்சு

தமிழ் நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதி தமிழீழ விடு

இச்சந்திப்புகளைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்த யோ

திக்க முடியாமல் போய் விட்டதாகவும் இதனால் மீண்டும் அவர்களைச் சந்தித்துப் பேசியே முடிவு சொல்லலாமென்றும் இதனைப் பிரதிநிதிகள் தெரிவித்து கருணாநிதியிட

### "தாக்கும் நிற்பந்தம் ஏற்படலாம்"

(யாழ்ப்பாணம்)

மார்ச்மா , முடிவுக்குள் இந்திய அமைதி காக்கும் படை இங்கிருந்து முற்றாக வெளியேறிவிடும் எனத் தாம் நம்புவ



கொள்வது தவிர்க்கப்பட்டது.

இதே சமயம் இந்தியப் படையை வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து படிப்படியாக விலக்கிக் கொள்ளும் நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டன. இப்பொழுது வடக்கில்பலாலிப் பகுதியிலும் வடமராட்சியிலும் கிழக்கில் திருகோணமலைப் பகுதியிலுமே இந்திய இராணுவம் இருந்து வருகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதா என்ற

(6-ம் பக்கம் பார்க்க)

## பாக். அணு. உற்பத்திக்கு பிரான்ஸ் உதவி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு அனுசக்தி தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்க பிரான்ஸ் முன்வந்துள்ளது. இதனை பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரான்சின் ஜனாதிபதி மித்தரோவ் தெரிவித்தார். பாகிஸ்தான் தேசியப் பேரவையில் இதனைத் தெரிவித்த மித்தரோவ் மேலும் பேசுகையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அதன கூட்டாளிகளும் மூன்றாம் உலக நாடுகளின் தேவைகளை மறந்துவிடக் கூடாது என்றும் தெரிவித்தார்.

மித்தரோவ் பாக்கிஸ்தான் ஜனாதிபதி குலாம் இசாக்கானைச் சந்தித்த போது குளாம் இசாக்கான் இந்தியா பற்றியும் அது காஸ்மீரில் நடதுந் கொள்ளும் முறை பற்றியும் காரசாரமாகக் கண்டித்தார் மித்தரோவ் அகார் கஷ்மீரியத் தலைவர் சத்தார் அப்துல் கயாம் அவர்களையும் சந்தித்துப் பேசினார்.

## இப்படியும் மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உயர் நிறுவனம் ஒன்றில் பரீட்சைப் பகுதிக்கு விநியோகிக்கப்பட்ட ஸ்கென்சில் பெட்டிகள் ஒவ்வொன்றிலும் 15 ஸ்கென்சில்கள் குறைவாக இருப்பதாகத் தெரிய வருகின்றது. அந் நிறுவனத்தின் களஞ்சியத்தில் இருந்தே இவ் ஸ்கென்சில்கள் விநியோகிக்கப்பட்டன. இவ் ஸ்கென்சில் மோசடி தொடர்பாக உயர் மட்டம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

### தனியார் மயப்படுத்தல் தொடர்பாக

# இ.தொ.கா. - இலங்கை அரசு விரிசல்

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் உள்ள பெருந்தோட்டங்களை மீண்டும் தனியார் மயமாக்கும் இலங்கை அரசாங்கத்தின் யோசனைகளுக்கு போக்குவரத்து இராஜாங்க அமைச்சரும், இலங்கைத்

பெரும்பாலும் அந்நியர்களான அவர்களது நிர்வாகத்தின் கீழேயே தனியார் மயப்படுத்தப்பட்டு இருந்தன. சுமார் இருநூறு ஆண்டுகளாக இவ்வாறு தனியார் மயப்படுத்தப்பட்டு இருந்த பெருந் தோட்டங்களில் வேலைக்கு

இதே தோட்டங்களை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை இலங்கை அரசாங்கம்

(6-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை இராஜினாமா



# நடக்கும் உயர்மட்ட சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவரான மாத்தயா என்றழைக்கப்படும் திரு. மகேந்திரராஜா இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை நாளை வியாழக்கிழமை சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இரு தலைவர்களும் எந்த நேரம் எங்கே சந்திப்பார்களென்பது இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை உறுதி செய்யப்படவில்லை.

இச் சந்திப்பின்போது வடக்குக் கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றம், பாதுகாப்புப் படைகள் சம்பந்தமான விவகாரங்கள், மாகாணசபை பற்றிய பிரச்சினை, தேர்தல் பற்றிய விடயங்கள் தொடர்பாக பேசப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## "தாக்கும் நிற்பந்தம் ஏற்படலாம்"

(யாழ்ப்பாணம்)

மார்ச்மா , முடிவுக்குள் இந்திய அமைதி காக்கும் படை இங்கிருந்து முற்றாக வெளியேறிவிடும் எனத் தாம் நம்புவதாகவும், அவ்வாறு வெளியேறத் தவறினால் அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிற்பந்தம் தமக்கு ஏற்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் தெரிவித்துள்ளார்.

## கருணாநிதியுடன் பேச்சு

தமிழ் நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதி தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சென்னையில் சந்தித்துப் பேசியபின் ஈ. பி. ஆர். எல் எவ், ஈ. என். டி. எல். எவ், புளட், ரெலோ ஆகிய குழுக்களின் பிரதி நிதிகளையும் சந்தித்துப் பேசிய பின் மீண்டும் விடுதலைப் புலிகளின் பிரதநிதிகளையும் சந்தித்துப் பேசியிருந்தார்

இச்சந்திப்புகளைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்த யோசனைகளுக்குத் தாங்கள் நாளை இருபத்திரெண்டாம் தேதி வியாழக்கிழமை பதில் சொல்வதாக ஈ. பி. ஆர். எல் எவ். பிரதநிதிகள் தெரிவித்திருந்தனர்.

திருகோணமலையில் தங்கள் தலைவர்கள் பத்மநாபாவும் வரதராஜப்பெருமாளும் இருப்பதாகவும் கொழும்பிலிருந்து தாங்கள் புறப்பட்டு வந்ததால் அவர்களைச் சந்திக்க முடியாமல் போய் விட்டதாகவும் இதனால் மீண்டும் அவர்களைச் சந்தித்துப் பேசியே முடிவு சொல்லலாமென்றும் இதனைப் பிரதிநிதிகள் தெரிவித்து கருணாநிதியிடமிருந்து விடைபெற்றுச் சென்றனர்.

இதேசமயம் சிலதினங்களுக்கு முன் அளித்த பேட்டியொன்றில் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் இந்தியா எங்களை ஏமாற்றி விட்டது !புலிகளின் பக்கம்தான் கருணாநிதி நிற்கிறார்' என்று குறிப்பிட்டிருந்தார்.

## இலங்கைஅரசின்நிபந்தனை

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து கடந்த ஆண்டு ஜூலை 29 ஆந் தேதிக்கு முன் வெளியேற வேண்டுமென்று ஜனாதிபதிபிரேமதாசா காலக்கெடு விதித்தது இந்தியாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறக் கூடாதென்றும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்பட வேண்டுமென்றும் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்றும் வரதராஜப் பெருமாளும், பத்மநாபாவும் கூறி வந்ததுடன் ''இவை நிறைவேற்றப்படா விட்டால் தனிநாடு பிரகடனம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை'' என்றும் கூறி வந்தனர்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்துடன் தொடர்ந்து மோதி வந்தனர்.

டில்லியில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் போர்நிறுத்தம் ஏற்பட்டு இந்திய இராணுவமும் புலிகளும் மோதிக்

## மாநகரசபைக்கு ஒதுக்கிய நிதி இன்னும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்கு இவ்வாண்டு ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இரண்டு கோடி முப்பது லட்சம் ரூபாயும் இன்னும் மாகாணசபைக்கு வந்து சேரவில்லை என மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

போதிய அளவு வேலையாட்களும் உபகரணங்களும் வசதிகளும் இருந்தும் இந்தப்பணம் வந்து சேராததினால் அபிவிருத்தி வேலைகள் முடங்கிக் கிடப்பதாகவும்மேலும் தற்போது நிலைமை சீராக உள்ளதால் தெருவில் பயணிகள் நெரிசல் அதிகரித்துள்ளதாகவும் இதனால் இராக்கால வேளைகளில் வேலையாட்களை ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகரசபை வேலைப்பகுதியினர் தெரிவித்தனர்.

இலங்கை மத்திய அரசு ஏற்கனவே 850 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் உத்தரவாதமளிக்கப்பட்ட நிலைமையில் இரண்டு கோடி ரூபாய்

(6-ம் பக்கம் பார்க்க)

வடமராட்சியிலும் கிழக்கில் திருகோணமலைப் பகுதியிலுமே இந்திய இராணுவம் இருந்து வருகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதா என்ற

(6-ம் பக்கம் பார்க்க)

காளைச் சந்தித்த போது குளாம் இசாக்கான் இந்தியா பற்றியும் அது காஸ்மீரில் நடாத்துந் கொள்ளும் முறை பற்றியும் காரசாரமாகக் கண்டித்தார் மித்த

ஸ்கென்சில்கள் விநியோகிக்கப்பட்டன. இவ்ஸ்கென்சில் மோசடி தொடர்பாக உயர் மட்டம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

### தனியார் மயப்படுத்தல் தொடர்பாக

# இ.தொ.கா. - இலங்கை அரசு விரிசல்

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் உள்ள பெருந்தோட்டங்களை மீண்டும் தனியார் மயமாக்கும் இலங்கை அரசாங்கத்தின் யோசனைகளுக்கு போக்குவரத்து இராஜாங்க அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி தனது பலத்த கண்டனத்தை தெரிவித்து இருக்கிறார்.

இலங்கைக்கு பிரித்தானியர் வந்து மலையகப் பகுதிகளில் தேயிலை, இறப்பர் போன்ற பெரும் தோட்டங்களை உருவாக்கிய பின்னர் அவை பெரும்பாலும் அந்நியர்களான அவர்களது நிர்வாகத்தின் கீழேயே தனியார் மயப்படுத்தப்பட்டு இருந்தன. சுமார் இருநூறு ஆண்டுகளாக இவ்வாறு தனியார் மயப்படுத்தப்பட்டு இருந்த பெருந்தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டு வந்த மலையக தொழிலாளர்கள் தாம் அனுபவித்துவந்த துன்பங்களுக்கு எதிராக காலத்திற்குக் காலம் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவாக தேசியமயமாக்கும் திட்டங்களை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளலாயிற்று. ஆனால் இப்போது மீண்டும் இதே தோட்டங்களை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை இலங்கை அரசாங்கம்

(6-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை இராஜினாமா

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் மாகாணசபை அமைச்சரவை இராஜினாமா செய்துள்ளது. இவர்களது பதவிவிலகல் கடிதங்களை மேல் மாகாண ஆளுனர் சர்வானந்தாவிடம் முதலமைச்சர் முனசிங்கா ஒப்படைத்தார்.

### காங்கேசன்துறை முகாமிலிருந்து

# நேற்று விடுதலை பெற்ற 75 பேர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை இராணுவ முகாவில் இதுவரை காலமாகத் தடுத்து வைக்கப் பட்டிருந்தவர்களில் எழுபத்தைந்து பேர், நேற்று மாலை 4 மணிக்கு இந்திய அமைதிப் படையினரால் அழைத்துவரப் பட்டு, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். விடுதலை செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:-

டக்ளஸ் (நீர்வேலி) சரா (கல்வியங்காடு) மாஸ்ரர் (சுழிபுரம்) வாஞ்சி (கெருடாவில்) கமல் (புத்தூர்) ஈசன் (ஆனைக்கோட்டை) ராஜ் (கொக்குவில்) கீதன் (ஊரிக்காடு) சதீஸ் (கொக்குவில்) சீலன் (சாவகச்சேரி) இந்திரன் (வசாவிளான்) சிறி (அளவெட்டி) அக்குஸா (நெல்லியடி) டொக்கன் (சுன்னாகம்) பிரபாகரன் (நீர்வேலி) காண்டீபன் (ஆனைக்கோட்டை) சுரேஷ் (திருநெல்வேலி) யோன்சன் (உரும்பிராய்) நகுலேஸ்வரன் (வல்வெட்டித்துறை) குமார் (புன்னாலைக் கட்டுவன் குமார் (சுழிபுரம்) நாகலிங்கம் (கிளிநொச்சி) டாடிஸ் (சுழிபுரம்) சங்கர் (யாழ்ப்பாணம்) சகாதேவன் (புத்தூர் அகிலன் (மன்னார்) அன்ரன் (காங்கேசன்துறை) றீகன் (ஊர்காவற்றுறை) மணி (காரைநகர்) பிரதீப் (வல்வெட்டித்துறை) அல்பேட் (வல்வெட்டித்துறை) சாளி (மானிப்பாய்) மனோ (பொலிகண்டி) துஷி (தெல்லிப்பழை) ரங்கன்றெபில் (யாழ்ப்பாணம்) கிருபா (தெல்லிப்பழை) தாஸ் (திருநெல்வேலி) நிமால் (காங்கேசன்துறை) பிரதீப் (தொண்டமானாறு) பவுண் (அல்வாய்) கிரவுன் (மயிலிட்டி) சுந்தர்

(6;ம் பக்கம் பார்க்க)

## யாழ். இந்துக் கல்லூரியில் கலந்துரையாடல்

''எம்மை வாழ்க்கைக்கு தயாராக்குவோம்'' என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு நிதிய உதவித் திட்டத்தி கீழ், கல்வித் திணைக்களத்தின ஆதரவில் படவரைஞர் பயிற்சி நெறி மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 23-ம் தி தி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும், இக் கலந்துரையாடலுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி அவர்களும் சிறப்பு விருந்தினராக முறைசாராக் கல்விப் பிரிவின் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்களும் மற்றும் பல உயர் அதிகாரிகளும் மாணவர்களும் கலந்து கொள்வார்கள்.

# ஒன்றுபடுத்தும் முயற்சியை விடுத்து தமிழக மக்களை குழுக்களிடமிருந்து காப்பாற்றுக!

## கருணாநிதியிடம் வாழப்பாடி கோரிக்கை

(சென்னை)

''தமிழ்த்தீவிரவாதக் குழுக்களுக்கிடையில் ஏற்படமுடியத ஒற்றுமை முயற்சியைஒதுக்கிவிட்டு ஆயுதந் தாங்கிய தமிழ்க் குழுக்களிடமிருந்து தமிழ் நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்று தமிழ் நாடு காங்கிறஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தமிழக முதல்வர் கருணாநிதியைக் கோரியிருக்கிறார்.

தமிழ்த்தீவிரவாதக் குழுக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த தமிழக முதல்வர் கருணாநிதி மேற்கொண்டுள்ள சமரச முயற்சிகள் அர்த்தமற்றவை என்றும் அத்தகைய முயற்சிகளைக் கைவிடுமாறு தமிழக முதல்வர் கருணாநிதி கடந்த சில நாட்களாக மேற்படி விடயம் தொடர்பாக எடுத்து வரும் முயற்சிகள் கூடப் போவதில்லை என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தமிழ்நாடு முதலமைச்சரை கோரியுள்ளார். இராமநாதபுரம் மண்டபம் சோதனை சாவடியில் கடந்த திங்கட்கிழமை ஆயுதம் தாங்கிய ஈழக் குழு ஒன்று பொலிஸ் காரர்களையும் பொதுமக்களையும் சுட்டுக் கொலை செய்தும் காயப் படுத்தியும் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய மனக்கிலேசங்களையும் சுட்டிக்காட்டிய வாழப்பாடி ராமமூர்த்தி பல்வேறு குழுக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என்றும் கூறியுள்ளார் நேற்று சென்னையில் பத்திரிகையாளர் மகாநாட்

(6-ம் பக்கம் பார்க்க)

## மண்ணின் பதிவுகள்

கடந்த இரண்டு ஆண்டுகளில் அமைதிப்படை என்ற பெயரில் ஈழத்திற்குள் புகுந்த இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு ஏற்பட்ட நிர்க்கதியை எமக்கு சுருக்கமாக எழுதி அனுப்பினால் நாம் அவற்றை எமது பத்திரிகையில் பிரசுரம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை எமது வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

ஆ—ர்


கேள்விப் பத்திரம்

வெற்றுச் சாக்கு விற்பனை

**வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4500 வரையிலான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப் பத்திரப் பணமாகவும், ரூபா 250/- கேள்வி வைப்புப் பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். வெற்றுச்சாக்குகளின் தரத்தினையும், வகையினையும் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் கட்டி வெற்றுச் சாக்குகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி:
1990 - 02 - 28 பிற்பகல் 2·30 மணி.

பொதுமுகாமையாளர்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்.

ஈழநாதம் வாழ்க !

இன்பத் தமிழ் வாழ்க !

- கார்ட் போர்ட்
- சிப்போர்ட்
- பிளைவூட் அலுமீனியம் பிட்டிங்ஸ்

ஆகிய பொருட்களுக்கு
நாட வேண்டிய இடம்


# "மாகாணசபைத்தேர்தலுக்கு சூழ்நிலை வந்துவிட்டது"

## விடுதலைப் புலிகள்

(கொழும்பு)

செயலற்றுள்ள வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்துப் புதிய தேர்தல் ஒன்றிற்க்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அமைப்பு கொழும்பிலிருந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுள்ளது.

தேர்தலை அவதானிக்க தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் ஒரு கண்காணிப்புக் குழுவை நியமிக்க விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளதோடு, அன்றாட வாழ்க்கை வடக்கிலும் கிழக்கிலும் வழமைக்குத் திரும்பி சமாதானம் நிலவுவதால், தேர்தலை வட-கிழக்கு மாகாணசபைக்கு நடாத்தும் காலம் வந்து விட்டது என்றும் அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காலக்கெடுவுக்குள் (மார்ச் 31) இந்தியப்படை வெளியேறிவிடும் என்றும், தமிழ்த்தேசிய இராணுவத்தின் மிச்ச சொச்சங்கள் விரைவில் ஆயுதங்களைக் கீழே போட்டு விடுவார்கள்என்றும் அவ்வறிக்கை கூறுவதோடு குழுவாகவிருந்தாலும், கட்சியாகவிருந்தாலும் தேர்தலில் பங்கு பற்றலாம் என்று அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

ஸ்ரீலங்கா அரசுடன் விடுதலைப் புலிகள் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பயனளித்துள்ளன என்றும், இதனால் ஆயுதக் குழுக்கள் நிராயுதபாணிகளாக ஆகியுள்ளதோடு, இந்திய அமைதிப் படையினரும் வெளியேறியுள்ளனர் என்றும். தமது அடுத்த கட்ட நடவடிக்கை வடக்குக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலாகும் என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

அத்துடன் விடுதலைப் புலிகள் பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றுவதற்கு முட்டுக்கட்டையாக யாப்பில் 1983இல் சேர்க்கப்பட்ட 6-வது ஷரத்தை நீக்கும்படியும் அறிக்கை கூறுகிறது.

# ராஜீவை துரத்தும் போபோர்ஸ்

ஆயிரத்து எழுநூறு கோடி ரூபாய் பீரங்கி பேரத்தில் போபர்ஸ் 64 கோடி ரூபாய் கமிஷன் கொடுத்த விவகாரம் வெளிப்படத் தொடங்கிய பின், முதன்முறையாக இந்திய அரசு கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானித்திருக்கிறது.

ஜனவரி 12ல் அமைச்சரவைச் செயலர் விநோத் பாண்டேயின் கோட்டை போன்ற அலுவலகத்தில் நடந்த மூத்த அதிகாரிகளின் இரண்டு மணி நேர கூட்டத்திற்குப்பின் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விசாரணையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் சொன்னார். "புது அரசு காரியத்தில் கருத்தாய் இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. நாங்கள் விஷயத்தை மூடி மறைப்பது கிடக்கட்டும். அதை திசை திருப்பக்கூட முடியாது. இறுதியில் சட்டம் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்துவிட்டது" கிரிமினல் வழக்கு முக்கியமாக வலியுறுத்துவது :

★ போபர்ஸ் அதிகாரிகள் சிலரால் மத்திய அரசு ஏமாற்றப்பட்டிருக்கிறது.

சுவிஸ் அரசு இது வரை பதிலளிக்க மறுத்து வந்தது.

"போபர்ஸ் போன்ற பாதுகாப்புப் பேரங்களில் பணம் பண்ணியவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது நாடு அளித்துள்ள தீர்ப்பு. எனது அரசு அந்தத் தீர்ப்புக்கு துரோகம் செய்யாது அவர்களின் பெயர்களை போபர்ஸ் வெளிப்படுத்த வேண்டும். எங்களை ஏமாற்ற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும் "என்கிறார் பிரதமர் வி. பி. சிங்.

வி. பி. சிங் பிரதமராகப் பதவியேற்ற உடனேயே கிரிமினல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முடிவு எடுக்கப் பட்டும், தேசிய முன்னனியின் ஒரு அமைச்சர் இதில் சம்பந்தப் பட்டிருக்க கூடிய சாத்தியக் கூறுகள் காரணமாகப் புதிய அரசு இந்த விஷயத்தில் நிதான மாக இருப்பதாகப் பலர் கருதினார்கள்.

வி. பி. சிங் மீதான நம்பிக்கையே பணமாக இருந்ததனால் அவர் குற்றவாளிகளை வெளிக்கொணர அமைதியாக வேலை செய்து கொண்டிருந்தார். இதைத் திறம்படச் விழுந்தது. அது கோழி பிடிக்கும் பாணியில் உலகம் பூராவும் சுற்றிச் சுற்றி ஓடிவந்து கொண்டிருப்பதாகவும், குற்றவாளிகளைப் பாதுகாத்து வருவதாகவும் மூன்றாண்டுகளாக அதன்மீது புகார் சொல்லப்பட்டு வருகிறது. எனவே, சத்ரேயின்காலத்தில் ஓரங்கட்டப்பட்ட டெபுடி இன்ஸ் பெக்டர் ஜெனரல் அந்தஸ்தில் உள்ள ஒரு திறமையான புலனாய்வாளர் கே.மாதவனிடம் புலனாய்வை ஒப்படைக்க முடிவுசெய்யப்பட்டது. போபர்சுக்கும் மற்றவர்களுக்கும் எதிராக ஓட்டைக்கு இடமில்லாதவழக் கொன்றைத் தாக்கல் செய்யும் பொருட்டுத் தலைமை வழக்கறிஞர் சோவி சோரப்ஜி தலைமைச் சட்ட நிபுணர் அசோக் தேசாய் மற்றும் அரசின் முக்கியமான சட்டத்துறை நிபுணர்களோடு ஆலோசனை கலந்தார் மாதவன்.இருவார கால உழைப்பிற்குப்பின் மத்திய அரசு மற்றும் சட்ட அமைச்சகத்தின் அனுமதி பெறுவதற்காக 45 பக்க ஆவணம் ஒன்றைத் தயார் செய்தார். இது தான் முதல் தகவல் அறிக்கையின் ஆதாரமாக இருக்கப் போகிறது.

# இரண்டாம்கட்ட நிவாரணம்

மீளக் குடியமர்தல் இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபாக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 24ம் திகதி சனிக்கிழமை, 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் யாழ்ப்பாணப் பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் கொடுப்பனவுகள் நடைபெறவுள்ளதாக மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். 24ந் திகதியன்று கிராம சேவகர் பிரிவுகளுக்கான முறையே; வேலணை - 973, கரம்பன் - 265, தீவுதெற்கு - 03, நாரந்தனை - 02, மொத்தமாக 1243 பேருக்கும், 25ம் திகதியன்று கிராமசேவகர் பிரிவுகளான முறையே இமயாணன் - 311, உடுப்பிட்டி வடக்கு-396 உடுப்பிட்டி - 444 மொத்தமாக 1151 பேருக்கும் வழங்கப்படவுள்ளன.

## மீண்டும் இறைவரி திணைக்களம்

(கொழும்புத்துறை)

யாழ். அரசாங்க செயலகத்தில் 1987-ம் ஆண்டு பிற்பகுதியில்இருந்துசெயற்படாதிருந்த இறைவரித் திணைக்களத்தை மீண்டும் இயங்க வைக்க யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அடுத்த பங்குனி மாதமுற்பகுதி தொடக்கம் அத்திணைக்களம் செயற்பட உள்ளது.

## மன்னாரில் குடி நீர் வழங்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

மன்னார் நகரப் பகுதியில் ஏற்பட்டுள்ள குடி நீர் தட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முருங்கனில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் அனுப்பி வைக்க அரசாங்கம் முடிவு செய்து, அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் மாரி கால மழை, மன்னார்ப் பகுதியில் குறைவா பெய்த காரணத்தினால் அங்கு வரட்சி நிலவுகிறது.

## வரி விளம்பரம்

### அறிவித்தல்

யாழ். செயலக சிற்றூண்டிச் சாலை நடத்துனர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவு திகதி 1990-03-02 கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா 25/-- செயலாளர் யாழ். செயலக நலன்புரிச் சங்கம். R/102

## உடற்பயிற்சி போட்டி

(யாழ்ப்பாணம்)

குருநகர் கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டி இன்று புதன்கிழமை புனித யே:ஸ் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.


நல்வாழ்த்துக்கள்

**New Stanleys**

Authorised Distributors for CIC Paints.
Dealers in: PAINTS, HARDWARE & BUILDING MATERIAL ETC.,

யாழ் நகரில்

டியூகோ, டியூலக்ஸ், பென்ரலைற் பெயின்ற் வகைகளுக்கு
உத்தரவுபெற்ற வியாபார நிறுவனம்

வேலணை ப. நோ. கூ. சங்கம்.

ஈழநாதம் வாழ்க !

இன்பத் தமிழ் வாழ்க !

- கார்ட் போர்ட்
- சிப்போர்ட்
- பிளைவூட் அலுமினியம் பிட்டிங்ஸ்

ஆகிய பொருட்களுக்கு
நாட வேண்டிய இடம்

# ஜெஸீமாஸ்

95, ஸ்டான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

எங்கள் தமிழ் வாழ்க!

ஈழநாதம் வாழ்க!

மின்சார உபகரண விற்பனையாளர்

நீர் இறைக்கும் பம்புகள்

சொலிட்

சிக்மா

தயாஸ்

நியூரோன்

எஸ்லோன் பைப்புகள்

உபகரணங்களும்

**JAFFNA ELECTRICALS**
ELECTRICAL CONTRACTORS & DEALERS
6, STANLEY ROAD,
JAFFNA.

போன்ற அலுவலகத்தில் நடந்த மூத்த அதிகாரிகளின் இரண்டு மணி நேர கூட்டத்திற்குப்பின் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விசாரணையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் சொன்னார். ''புது அரசு காரியத்தில் கருத்தாய் இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. நாங்கள் விஷயத்தை மூடி மறைப்பது கிடக்கட்டும். அதை திசை திருப்பக்கூட முடியாது. இறுதியில் சட்டம் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்துவிட்டது'' கிரிமினல் வழக்கு முக்கியமாக வலியுறுத்துவது:

★ போபர்ஸ் அதிகாரிகள் சிலரால் மத்திய அரசு ஏமாற்றப்பட்டிருக்கிறது.

★ போபர்ஸ் மற்றும் இந்திய அதிகாரிகள் சிலர் மத்திய அரசிற்கு வரவேண்டிய வருவாயை வரவிடாமல் சதி செய்தனர்.

★ கமிஷன் பெற்றவர்கள் யார் என்பதைக் கண்டறியும் தடயங்களை மூடிமறைக்கும்பொருட்டு போலி ஆவணங்கள் தயாரிக்கவும் சில ஆவணங்களில் பின் தேதியிடுவதற்கும் ஒரு முயற்சி நடந்துள்ளது,

★ சிலர் சட்டத்திற்கும் புறம்பான வழிகளில் நிதி ஆதாயம் அடைந்துள்ளனர். நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளனர்.

அரசு வட்டாரங்கள் தெரிவித்த தகவலின் படி, ஸ்வீடன் மற்றும் சுவிட்சர்லந்து அரசுகள் பதிலளிப்பதை வற்புறுத்தும் விதத்தில், கிரி - மினல் வழக்குகள் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. பெரும்பாலான கமிஷன் தொகைகள் சுவிஸ் வங்கிக் கணக்கில் போடப்பட்டிருந்தும், இந்திய அரசு எந்தவொரு கிரிமில் வழக்கையும் தொடுக்கவில்லையென்பதால் என்பது அவர்களுக்குத் தெரியும் ''என்கிறார் பிரதமர் வி. பி. சிங்.

வி. பி. சிங் பிரதமராகப் பதவியேற்ற உடனேயே கிரிமினல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முடிவு எடுக்கப் பட்டும், தேசிய முன்னனியின் ஒரு அமைச்சர் இதில் சம்பந்தப் பட்டிருக்க கூடிய சாத்தியக் கூறுகள் காரணமாகப் புதிய அரசு இந்த விஷயத்தில் நிதான மாக இருப்பதாகப் பலர் கருதினார்கள்.

வி. பி. சிங் மீதான நம்பிக்கையே பணமாக இருந்ததனால் அவர் குற்றவாளிகளை வெளிக்கொணர அமைதியாக வேலை செய்து கொண்டிருந்தார். இதைத் திறம்படச் செய்வதற்கு ஏற்றவாறு பாதுகாப்பு மற்றும் ஊழியர் துறைகளைத் தம்மிடத்தில் வைத்துகொண்டார். பதினைந்து நாட்களில் இந்த விஷயம் குறித்த 200 ஃபைல்களைப் பார்த்தார். மூத்த அதிகாரிகளுடன் பல கூட்டங்களை நடத்தினார். போபர்ஸ்விவகாரத்தை மூடி மறைக்க உடந்தையாயிருந்தவர்கள் எனக் கருதப் படும் கோஷ்டியை அகற்றிய பின்னரும், சில முக்கிய அதிகாரிகளை, கடந்த காலத்தில் அவர்களது அமைச்சகத்தில் செய்யப்பட்ட முடிவுகளுக்கு அவர்களைப் பொறுப்பேற்கச் செய்யும் பொருட்டுப் பிரதமர் அலுவலகத்திலும், பாதுகாப்பு அமைச்சகத்திலும் நிறுத்தி வைத்துக் கொண்டார். கண்காணிப்பு மற்றும் அமுல் பிரிவு அமைப்புகளில் பலரின் தலைகள் உருண்டன. மோகன் கத்ரேக்குப் பதிலாகக் கடந்த வருடம் அக்டோபரில் நியமிக்கப்பட்ட சி.பி.ஐ.யின் இயக்குநர் அருண் முகர்ஜி மாற்றப்பட்டு, அவருக்குப்பதில் ராஜஸ்தானைச் சேர்ந்த ஐ.பி.எஸ். அதிகாரி ராஜேந்திர சேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வழக்கை விசாரிக்கும் பொறுப்பு சி.பி.ஐ யின் மீது

ளர் கே.மாதவனிடம் புலனாய்வை ஒப்படைக்க முடிவுசெய்யப்பட்டது. போபர்சுக்கும் மற்றவர்களுக்கும் எதிராக ஓட்டைக்கு இடமில்லாதவழக்கொன்றைத் தாக்கல் செய்யும் பொருட்டுத் தலைமை வழக்கறிஞர் சோலி சோரப்ஜி தலைமைச் சட்ட நிபுணர் அசோக் தேசாய் மற்றும் அரசின் முக்கியமான சட்டத்துறை நிபுணர்களோடு ஆலோசனை கலந்தார் மாதவன். இருவார கால உழைப்பிற்குப்பின் மத்திய அரசு மற்றும் சட்ட அமைச்சகத்தின் அனுமதி பெறுவதற்காக 45 பக்க ஆவணம் ஒன்றைத் தயார் செய்தார். இதுதான் முதல் தகவல் அறிக்கையின் ஆதாரமாக இருக்கப் போகிறது.

முதல் தகவல் அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கும் போதுதான் உண்மையான சோதனையே ஆரம்பமாகும். சிபிஐயின் மூத்தஅதிகாரிகளை விசாரணை செய்வதுதவிர, தகுந்தஆதாரங்களைத்தேடும் பொருட்டுச் சிலரைஸ்வீடனுக்கும் சுவிட்சர்லாந்துக்கும் அனுப்ப வேண்டியிருக்கும். குற்றம் சாட்டப்படக் கூடியவர்களின் பட்டியல் இன்னும்இறுதி செய்யப்படவில்லை. என்றாலும், போபர்சின் முன்னாள் நிர்வாக இயக்குனர் மார்ட்டின் ஆர்ட்போவைக் குற்றம் சாட்டப்பட்டவர்களில் முக்கியமானவராகவும் அவருடன் சேர்த்து இந்தியாவில் போபர்சின் முந்தைய ஏஜெண்டான அனட்ரானிக் கார்ப்பரேஷனைச் சேர்ந்த வின்சத்தா, பிட்கோ மொரெஸ்கோ மற்றும் சில நிழல் கம்பெனிகள் குற்றம் சாட்டப்படும் இந்து ஜாக்களில் ஒருவர் மீது குற்றம் சாட்டுவதற்குரிய சாத்தியக் கூறுகளைப் பற்றி அரசு பரிசீலித்துள்ளது. எனினும் இன்னும் அதிகமான ஆதாரங்கள் திரட்டப்படும் வரை காத்திருக்க முடிவு செய்துள்ளது.

போபரஸ்தான் பெயர்களை வெளிபிட முடியும் என்று அரசு நிச்சயமாக நம்புவதால் போபர்ஸ், இயக்குனர்கள் மற்றும் முன்னாள் அதிகாரிகள் மீது நிர்ப்பந்தம் கொண்டு வருவதையே நோக்கமாகக் கொண்டு முழு நடவடிக்கையும் நடத்தப்படும்.

நன்றி: இந்தியா ருடே.

(நாளை தொடரும்)

## படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

எமது ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

எழுத்தாளர்கள் அறிவியல், அரசியல், தொழிநுட்பம், விஞ்ஞானம், மருத்துவம், கலை, இலக்கியம் போன்றவற்றுடன் சம்பந்தமுடைய கதை, கட்டுரை, கவிதைகளை எழுதி அனுப்பலாம்.

தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுவதோடு அவற்றிக்கான சன்மானமும் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர்'
'ஈழநாதம்'
31, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

நல்வாழ்த்துக்கள்

# New Stanleys

Authorised Distributors for CIC Paints.
Dealers in: PAINTS, HARDWARE & BUILDING MATERIAL ETC.,

யாழ் நகரில்

டியூகோ, டியூலக்ஸ், பென்ரலைற் பெயின்ற் வகைகளுக்கு
உத்தரவுபெற்ற வியாபார நிறுவனம்

நியூ ஸ்ரான்லீஸ்

95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22135

ஈழநாதம் வாழ்க!

அழகு ஒரு ஆதனம்
அதற்கு ஒன்று தங்க ஆபரணம்
அழகான தங்க ஆபரணத்திற்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்

# நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## இன்று நினைவு தினம்

# சாரணிய இயக்கத்தின் தந்தை

# கில் வெல் பேடன் பவெல் பிரபு

உலகின் பிரதம சாரண தலைவனும், ஸ்தாபகருமாக பேடன் பவெல் பிரபு விளங்குகின்றார். இங்கிலாந்திலே இலண்டன் நகரிலே 1957ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ந் திகதி இராபர்ட்டு ஸ்டீவன் சன் சிமித் பேடன் பவல் பிறந்தார். இவரது தந்தை ஒக்ஸ்போர்ட்டிலே பேராசிரியராக இருந்த சங். எச். ஜி. பேடன்பவெல் என்பவராகும். இவரது தாயார் பிரித்தானிய கடற்படைத் தளபதி டபிள்யூ. ரீ. சிமித் என்பவரது மகளாகும்.

உலக சாரணவியக்கத் தந்தையான கில்வெல் - பேடன் பவெல் பிரபு அவர்கள் சாரணீயத்தை ஆரம்பிப்பதற்கான காரணத்தினை பின்வருமாறு கூறுகின்றார். ''பள்ளிச் சிறுவனாக இருந்த காலத்தில், எனது ஓய்வு நேரங்களிலே, வனங்களுக்குச் சென்று முயல் வேட்டையாடி வந்து அவற்றை உணவுக்குச் சமைப்பது, வனங்களிலுள்ள பறவையினங்களை அவதானிப்பது, மிருகங்களின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து செல்வது முதலியவை போன்ற செயல்களை ஆற்றிவந்தேன். இவை சாரணீயத்துக்கு அத்தியாவசியமானவைகளாகும். நான் இராணுவத்திற் சேர்ந்த பின்னர் இந்தியா, ஆபிரிக்கா போன்ற இடங்களிலுள்ள காடுகளிலே மிருக வேட்டைகளில் பெரிதும் ஈடுபட்டும், கனடாவிலுள்ள வனசாரணர் களுடன் வாழ்ந்தும் வந்துள்ளேன். இதன் பின்னர் தென்னாபிரிக்க யுத்தத்தில் உண்மையான சாரணீயத்தினை யான் கைக்கொண்டேன்''

தென்னாபிரிக்காவிலிருந்து 1901 ஆம் ஆண்டு பெருவீரனாக இவர் தாய்நாடு திரும்பினார். அங்கு இவருக்கு பெரும் கௌரவங்கள் காத்திருந்தன. அத்துடன் இராணுவத்தினருக்காக இவர் எழுதிய ''சாரணீயத்துக்காய துணை'' என்னும் நூல் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தது.

1908ம் ஆண்டின் முற்பகுதியில், இருவாரங்களுக்கொரு பிரசுரமாக ஆறு பிரசுரங்களாக இளைஞர் சாரணீயம் என்னும் நூலை வெளியிட்டார். இவற்றுக்கான சித்திரங்களையும் இவரே எழுதினார். உலகத்திலுள்ள சிறுவர்களுடைய ஒரு இயக்கமாக இது வளருமென்று அவர் அன்று கனவுகூடக் கண்டிருக்க மாட்டார். 1910 ஆம் ஆண்டில் இதன் வளர்ச்சியின் பெருக்கைக் கண்ட பேடன் பவெல் இதுவே தமது வாழ்க்கையின் தொண்டாக முடியுமென்பதை உணர்ந்தார். வருங்கால யுத்தங்களுக்கு சிலரைப் பழக்கி விடுவதிலும் வருங்கால சந்ததியினரை உத்தமர்களாக்குவதற்கும் இப்பயிற்சியே சிறந்ததென்று அவர் பெரிதும் உணர்ந்தார்.

1912 ஆம் ஆண்டில் உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள சாரணரைச் சந்திப்பதற்காக உலகப் பிரயாணத்தினை அவர் மேற்கொண்டார். சாரணீயம் ஒரு உலக சகோதரத்துவ இயக்கமாவதற்கு ஆரம்ப முயற்சி இதுவேயாகும். முதலாவது உலக யுத்தம் வந்து இவ் வேலையைத்தடை செய்தது. ஆயினும், யுத்தம் முடிந்த பின்னர் கருமம் மீண்டும் தொடங்கப்பட்டது. முதல் உலக சாரணர் மேலனத்துக்காக 1920 ஆம் ஆண்டில் சர்வதேசத்துச் சாரணரும் இலண்டனில் கூடினர். இம் மேலனத்தின் இறுதி நாளான ஆஸ்ட் 6ஆந் தேதி பேடன் பவெல், ''உலகப் பிரதம சாரணர்'' என்று பிரகடனம் செய்யப்பட்டார்.

சாரண இயக்கம் வளர்ந்து வளர்ந்து அதன் 21 ஆவது ஆண்டில் சுமார் 20 லட்சம் சாரணர் உலகின் நாகரீக தேசங்களெங்கும் இருந்தனர். இச் சமயத்தில் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர், ''கில்வெல் பேடன் பவெல் பிரபு'' என்று பட்டம் சூட்டி அவரைக் கௌரவித்தார். எப்படியிருந்த போதிலும் இவர் பேடன் பவெல்லாக உலக பிரதம சாரணராகவே இருப்பார். இவரது தேக நலம் குன்றத் தொடங்கியது. தமது 80வது வயதில் தமக்குப் பிரியமான ஆபிரிக்காவுக்கு தமது மனைவி பேடன் பவெல் சீமாட்டியுடன் சென்றார். இவரது மனைவி இவருக்கு பல விடயங்களிலும் பேருதவி புரிந்துள்ளார். பெண்கள் சாரணீய இயக்கமாக ''வழிகாட்டி வாலியர்'' இயக்கத்தின் உலகத் தலைவியாக இவர் இருந்து தொண்டுகள் ஆற்றியுள்ளார். இவ்வியக்கமும் பேடன் பவெல் பிரபுவாலேயே ஆரம்பிக்கப்பட்டதாகும்.

அண்மையிலே சார்க் நாடுகள் பங்கு பற்றும் 'சார்க் சாரணர் ஜம்போரி' 15 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வரை கொழும்பில் விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ் வைபவத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இவ் விழாவில் சார்க் சாரணர் ஜம்போரிக் கொடியை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள் ஏற்றி ஆரம்பித்து வைத்தார். இவ் வைபவம்

# நிரந்தர அமைதிகிடைக்கும்வரை போராடுவோம்


(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவ முன்னணியின் தலைவர் திரு. எஸ். சிவபாலன் அவர்கள். கோண்டாவில் வடக்கு வாகீஷ்வரி சனசமூக நிலையமுன்றலில் இடம்பெற்ற ''நடந்து வந்த பாதையில்''

பாக நாம் எமது பாதுகாப்பை நிரந்தரமாக உறுதி படுத்திக்கொள்ளும் வரை போராட்டம் தொடர்ந்தே தீரும்''.

'' 1976ஆம் ஆண்டு தொட்டு இற்றைவரை பல கஷ்டங்களையும், இழப்புக்களையும் அடைந்து வருகின்றோம்.

இது நாள் வரை ஏறக்குறைய 1300க்கும் அதிகமான




## காஷ்மீரியர் பிரச்சினை :

# இந்திய - பாகிஸ்தான் உள்நாட்டு அதிகாரப் போட்டியே!

எரிமலைகள் காலத்திற்குக் காலம் குமுறுவது போன்று தென்னாசியாவில் காஷ்மீர்ப் பிரச்சினை காலத்திற்குக் காலம் எரிமலையாக வெடிப்பதுண்டு. அவ்வாறு குமுறு போது அது இறுதியில் இந்தியா- பாகிஸ்தான் போராக முடிவதுண்டு. பின்னர் சிறிது காலத்தில் பிரச்சினை நீறு பூத்த நெருப்பாக அடங்கியிருக்கும்.

தற்பொழுது மீண்டும் ஒரு குமுறல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மீண்டும் ஓர் இந்தியாபாகிஸ்தான் போராக உருவாகுமா என்ற கேள்வி எழும்பியுள்ளது. கடந்த கால

அஸாம் (போடோக்கின்பிரச்சினை) மாநிலங்களில் பிரச்சினைகள் இந்திரா காங்கிரசினாலேயே பெரிது படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தேசிய மகா நாட்டுக்கட்சி, இந்திரா காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சியினதும் கூட்டரசாங்கமே காஷ்மீர் மாநிலத்தில் கடைசியாக ஆட்சி புரிந்தது. இக்காலத்திலேயே தீவிரவாதம் பெரிய அளவில் காஷ்மீரில் வளர்ந்துவந்தது.

புதிய சிறுபான்மை அரசாங்கம் மத்தியில் பதவியேற்ற சில நாட்களுக்குள் அதன் உள்துறை அமைச்சரின் மகள்

னது. பாரதீய ஜனதாக் கட்சி தீவிர இந்துசய ஆதரவு கட்சியாகும். காஷ்மீரில் ஓர் நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் இராணுவ அடக்குமுறை மேற்கொள்ளப்படுவதையே அக்கட்சி ஆதரிக்கும். அதே போன்று பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சினையில் தலையிடும் பட்சத்தில் ஓர் போர்மூலமே பாகிஸ்தானுக்குப் பதில் சொல்ல பாரதீய ஜனதாக் கட்சி முனையும். ஆனால் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி காஷ்மீர் மீது இராணுவ அடக்குமுறைகளையோ, பாகிஸ்தான் மீதான ஒரு போரையோ ஆதரிக்கக்கூடிய

ஓரளவு ஒத்துப் போகத்தக்கதாக பாகிஸ்தான் உளவு ஸ்தாபனமும் செயற்படுகின்றது. காஷ்மீர், பஞ்சாப் தீவிரவாதிளுக்கு ஆயுதங்களை வழங்குவதில் இவ்ஸ்தாபனம் உதவுகின்றது. இந்நிலையில் பெனாசீர் பூட்டோ இவர்களைவிட உயர்ந்தளவில் இந்தியா எதிர்ப்புவாதத்தைப் பேசினாலேயே ஆட்சியில் நிலைக்கக்கூடிய நிலை உள்ளது. ஆனால் பெனாசீர் போர் ஒன்றை நடத்தின் தலையில் தானே மண்ணை அள்ளிப்போடுவதற்கு ஒப்பா

காடுகளிலே மிருக வேட்டைகளில் பெரிதும் ஈடுபட்டும், கனடாவிலுள்ள வனசாரணர்களுடன் வாழ்ந்தும் வந்துள்ளேன். இதன் பின்னர் தென்னாபிரிக்க யுத்தத்தில் உண்

1912 ஆம் ஆண்டில் உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள சாரணரைச் சந்திப்பதற்காக உலகப் பிரயாணத்தினை அவர் மேற் கொண்டார். சாரணீயம் ஒரு உலக சகோதரத்துவ இயக்கமாவதற்கு ஆரம்ப முயற்சி இதுவேயா

இவர் இருந்து தொண்டுகள் ஆற்றியுள்ளார். இவ்வியக்கமும் பேடன் பவெல் பிரபுவாலேயே ஆரம்பிக்கப்பட்டதாகும்.

அண்மையிலே சார்க் நாடுகள் பங்கு பற்றும் 'சார்க் சாரணர் ஜம்போரி' 15 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வரை கொழும்பில் விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ் வைபவத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இவ் விழாவில் சார்க் சாரணர் ஜம்போரிக் கொடியை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள் ஏற்றி ஆரம்பித்து வைத்தார். இவ் வைபவம் வெகு சிறப்பாக கொழும்பில் நடைபெற்றமை மூலம் சாரண இயக்கத்தினது முக்கியத்துவத்தினை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

- கணபதி

# நிரந்தர அமைதிகிடைக்கும்வரை போராடுவோம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவ முன்னணியின் தலைவர் திரு. எஸ். சிவபாலன் அவர்கள். கோண்டாவில் வடக்கு வாகீஷ்வரி சனசமூக நிலையமுன்றலில் இடம்பெற்ற ''நடந்து வந்த பாதையில்'' என்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக கலந்துக் கொண்டு உரையாற்றும் போது பின்வருமாறு தெரிவித்தார்.

''இன்று எமக்கு கிடைத்துள்ளது தற்காலிக அமைதியே. நிரந்தர அமைதி எம் மக்களுக்கு கிடைக்கும் வரை நாம் எமது போராட்டத்தை விட்டு விட முடியாது. குறிப்பாக நாம் எமது பாதுகாப்பை நிரந்தரமாக உறுதி படுத்திக்கொள்ளும் வரை போராட்டம் தொடர்ந்தே தீரும்''.

'' 1976 ஆம் ஆண்டு தொட்டு இற்றை வரை பல கஷ்டங்களையும், இழப்புக்களையும் அடைந்து வருகின்றோம்.

இது நாள் வரை ஏறக்குறைய 1300க்கும் அதிகமான விடுதலைப் போராளிகளை இழந்துள்ளோம். இவற்றை வெறும் மரணங்களாக நினையாது தியாகங்களாக மதித்து நாம் செயல் படவேண்டும்.

ஆயிரக்கணக்கான உயிர்களையும், பலகோடி பெறுமதியான சொத்துக்களையும் இன்று இழந்த நிலையிலும் மக்கள் எம்மீது கொண்டுள்ள ஈடுபாட்டினை உணர்ந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

## மடத்தடியில்....

ஆபிரிக்காவில் 'போயர்கள்' இனத்தினர் தமது சுதந்திரத்திற்காகப் போராடினர். அத் தருணத்திலே வின்சன்ட் சேர்ச்சில் போர் வீரராக அங்கு சென்றிருந்தார்! அவர்களின் வீரமிகு போராட்டத்தின் முன்பு நின்று பிடிக்க முடியாதவர்களில் ஒருவர் சேர்ச்சில்! ஒழிந்து ஓடி இங்கிலாந்து வந்து சேர்ந்த சேர்ச்சில் போயர்களைப் பாராட்டினார். அவர்களின் வீரத்தை மதிப்பாகச் சங்கநாதம் செய்தார்!

இந்திய ராணுவம் இலங்கைக்கு வந்தபோது 'ஓடரு'க்குச் செயல்படும் விதத்தில் நடந்து கொண்டது!

உங்களுக்கு வீடு, வாசல், கழிவறை எல்லாம் இருக்கின்றனவே எதற்குத்தான் போராடுகின்றீர்கள் எனக் கேட்டார் ஒரு மராத்திய ராணுவ வீரர்!

போகப் போகத்தான் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் நியாயம் இருப்பதை இந்திய ராணுவத்தினர் உணர்ந்து கொண்டனர்.

நியாயம் அற்ற நிலையில் தாம் பொம்மை அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்சாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்ததையும், உணர்ந்து கொண்டனர்.

வவுனியாவில் சந்தித்த இந்திய ராணுவ வீரர் ஒருவர் சொன்னார்; ''கூண்டுக் கிளிகள்'' எங்களுடன் திரிகின்றன. இவர்கள் உண்மையான சுதந்திர வீரர்கள் அல்லர். இவர்கள் எம்மிடம் உணவு தேடித்திரியும் துப்பாக்கி வீரர்கள்; சுதந்திரம் வேண்டுமென்றால் புலிகள் போல் எதிர்த்துப்போராட வேண்டும்.''

இந்திய வீரர்களே... உங்களை இன்னும் நாம் நேசிக்கின்றோம். உங்கள் நாட்டிற்கு போனபின்பு சொல்லுங்கள் விடுதலைப் புலிப் போராளிகள் எப்படி என்று!

- வன்னியூரான்

## கோண்டாவிலில் தண்ணீர்த் தாங்கி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு புதுக்கோட்டைக் கிராம மக்களின் குடிநீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் புதிதாக தண்ணீர் தாங்கி ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா 23ந்திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெறும்.

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் முயற்சியால் ஏறக்குறைய 35 ஆயிரம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப் படவுள்ளது.

## மெக்காவுக்கு விசா

(கொழும்பு பெப். 20)

புனித மெக்கா யாத்திரையை மேற் கொள்ளும் யாத்திரீகர்களுக்கான பிரயாண ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு சவூதி அரேபியா அதிகாரிகள் இருவர் நாளை வியாழக்கிழமை கொழும்பு வர இருக்கிறார்கள். இப் புனித யாத்திரையை மேற் கொள்ளும் யாத்திரீகர்கள் இவர்களிடமே விசாவும் பெற்றுக் கொள்ளலாம்.

# உளநாட்டு அதிகாரப் போட்டியே!

எரிமலைகள் காலத்திற்குக் காலம் குமுறுவது போன்று தென்னாசியாவில் காஷ்மீர்ப் பிரச்சினை காலத்திற்குக் காலம் எரிமலையாக வெடிப்பதுண்டு. அவ்வாறு குமுறும் போது அது இறுதியில் இந்தியா- பாகிஸ்தான் போராக முடிவதுண்டு. பின்னர் சிறிது காலத்தில் பிரச்சினை நீறு பூத்த நெருப்பாக அடங்கியிருக்கும்.

தற்பொழுது மீண்டும் ஒரு குமுறல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மீண்டும் ஓர் இந்தியாபாகிஸ்தான் போராக உருவாகுமா என்ற கேள்வி எழும்பியுள்ளது. கடந்த காலத்தில் இந்தியா- பாகிஸ்தான் என்பன காஷ்மீர் தொடர்பாக மூன்று முறை மோதிக் கொண்டிருப்பினும் இப்போர்களுக்கு காஷ்மீர் மக்கள் காரணமாக இருந்ததை விட இந்திய அரசும். பாகிஸ்தான் அரசும் சில வெளிநாட்டுக் சக்தியுமே காரணமாக இருந்துள்ளன.

இம்முறை காஷ்மீர் பிரச்சினை நெருக்கடியான நிலைகளை அடைவதற்கு இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தற்பொழுது உள்நாட்டு அரசியலில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களே முக்கியமான காரணமாகும்.

இந்தியாவில் தற்பொழுது ஆட்சியில் இருக்கும் வி. பி. சிங்கின் அரசாங்கம் ஓர் சிறுபான்மை அரசாங்கமாகும் அது தீவிர வலதுசாரிக்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியினதும் இடது சாரிக் கட்சியான மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தயவில்லாமல் ஆட்சிநடத்த முடியாது. ஆனால் இவ்விரு கட்சிகளும் சிறுபான்மை தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுப்பது தேசிய முன்னணி அரசாங்கத்தில் மீதுள்ள அன்பினால் அல்ல. இந்திரா காங்கிரஸ் மீதுள்ள வெறுப்பினாலேயே.

இந்நிலையில் இந்தியாவில் ஆட்சியிலிருக்கும் சிறுபான்மை அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிவரும் கட்சிகளுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்திராகாங்கிரஸ் கட்சி செயற்படத் தொடங்கியுள்ளது. அதற்கு காஷ்மீர் பிரச்சினையினை சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றது. இந்திரா காங்கிரஸ் கட்சி தேசிய நலனைத் தவிர்த்து தனதுகட்சி நலனுக்காக மாநில பிரச்சினைகளைத் தூண்டிவிடுவது ஒருபுதிய அம்சமல்ல. பஞ்சாப் அஸாம் (போடோக்கின்பிரச்சினை) மாநிலங்களில் பிரச்சினைகள் இந்திரா காங்கிரசினாலேயே பெரிது படுத்தப் பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தேசிய மகா நாட்டுக்கட்சி, இந்திரா காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சியினதும் கூட்டரசாங்கமே காஷ்மீர் மாநிலத்தில் கடைசியாக ஆட்சி புரிந்தது. இக்காலத்திலேயே தீவிரவாதம் பெரிய அளவில் காஷ்மீரில் வளர்ந்துவந்தது.

புதிய சிறுபான்மை அரசாங்கம் மத்தியில் பதவியேற்ற சில நாட்களுக்குள் அதன் உள்துறை அமைச்சரின் மகள் செல்வி ரூபியா காஷ்மீரியத் தீவிரவாதிகளால் கடத்தப் பட்டார். இக்கடத்தலின் மூலம் தமது சகபாடிகள் சிலரை தீவிரவாதிகள் மீட்டெடுத்தனர். இந்நிலையில் மத்திய அரசாங்கம் காஷ்மீரில் இருந்த தேசிய மகா நாட்டுக் கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சி சட்டம், ஒழுங்கை நிலைநாட்டத் தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டியது. காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கிடையில் கவனம் செலுத்த வென முன்னர் காஷ்மீரில் சர்ச்சைக்குரிய ஆளுனராக இருந்த, அதேவேளை திறமை மிக்க ஜக்மோகனை ஆளுனராக நியமித்தது. இவ் ஆளுநர் நியமனத்தில் தன்னைக் கலந்தாலோசிக்கவில்லை எனக் காரணம் காட்டி முதலமைச்சர் பாருக் அப்துல்லா பதவி விலகினார். இவர் பதவி விலகுவதற்கு முன்னர் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியுடன் கலந்தாலோசித்து, ராஜீவின் ஆலோசனையின் பேரிலேயே பதவி விலகினார்.

பாரூக் அப்துல்லாவைப் பதவி விலகும்படி ராஜீவ் காந்தி ஆலோசனை வழங்கியது காஷ்மீர்ப் பிரச்சினையை மத்திய அரசிற்கு நெருக்கடியைத் தோற்றுவிக்கும் நோக்குடனேயே காஷ்மீரில் பாருக் அப்துல்லாவின் மாநில அரசு பதவி துறந்ததால் மத்திய அரசின் நேரடி ஆட்சி காஷ்மீரில் ஏற்படும். இதனால் காஷ்மீர் பிரச்சினை இன்னும் தீவிரமடையும். அவ்வாறு தீவிரமடையும் படசத்தில் சிறுபான்மை அரசாங்கத்திற்கு அது பெரும் பிரச்சினையாக உருவெடுக்கும் என்பதனாலாகும்.

அமைச்சரவையில் சேராமல் வெளியில் இருந்து கொண்டு ஆதரவளிக்கும் பாரதீய ஜனதாமாக்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சி என்பன கொள்கை அளவில் எதிரும் புதிருமானது. பாரதீய ஜனதாக் கட்சி தீவிர இந்து சமய ஆதரவு கட்சியாகும். காஷ்மீரில் ஓர் நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் இராணுவ அடக்குமுறை மேற்கொள்ளப்படுவதையே அக்கட்சி ஆதரிக்கும். அதே போன்று பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சினையில் தலையிடும் பட்சத்தில் ஓர் போர்மூலமே பாகிஸ்தானுக்குப் பதில் சொல்ல பாரதீய ஜனதாக் கட்சி முனையும். ஆனால் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி காஷ்மீர் மீது இராணுவ அடக்குமுறைகளையோ, பாகிஸ்தான் மீதான ஒரு போரையோ ஆதரிக்கக்கூடிய நிலையில் இல்லை. இவ்வாறான நிலையில் காஷ்மீர் நெருக்கடியை எந்த வகையில் கையாள்வது என்பது சிறுபான்மை அரசாங்கத்திற்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தக்கூடியது. இதனால் இக் கட்சிகளுக்கு இடையில் முரண்பாடுகள் வலுவடைந்து மத்திய அரசிற்கு ஏதோ ஒரு கட்சி கொடுக்கும் ஆதரவில் இருந்து விலகும் பட்சத்தில் மத்திய அரசாங்கம் கவிழ்க்கப்படலாம் என இந்திரா காங்கிரஸ் எதிர்பார்க்கிறது.

இதே போன்றதொரு நிலையே பாகிஸ்தான் பக்கத்திலும் இருப்பதினால் காஷ்மீர் பிரச்சினை பெரிய அளவில் தூண்டப்படுகின்றது. இன்று பாக்கிஸ்தான் அரசியலில் பல்வேறு சக்திகள் உள்ளன. இவற்றுள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோவைத் தலைவராகக் கொண்டுள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சி, பஞ்சாப் மாநில முதல்வரைத் தலைவராகக் கொண்டுள்ள இஸ்லாமிய ஜனநாயகக் கட்சி பாகிஸ்தான் இராணுவம், பாகிஸ்தான் உளவு ஸ்தாபனம் இன்றைய ஜனாதிபதி ஆகிய சக்திகள் குறிப்பிடத்தக்கவை.

இச் சக்திகளுக்கு இடையில் உள்ள அரசியல் ஆதிக்கப் போட்டியானது காஷ்மீர்ப் பிரச்சினையில் அவர்களை முண்டியடித்துக் கொண்டு ஈடுபடவைக்கிறன்து. இதில்நவாப் சரீப் தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி காஸ்மீர் பிரச்சினையைத்தூண்டுவதன் மூலம் பெனாசீருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த விழைகின்றது. நவாப் சரீப் முதலமைச்சராக இருக்கும் பஞ்சாப் மாநிலம் இந்திய எல்லையுடன் இருப்பதால் இந்தியாவுடன் எல்லை விவகாரங்களில் பிரச்சினைகளத் தூண்டுவது இலகுவாக இருக்கின்றது. இவரது இக்தொண்டுக்கு ஓரளவு ஒத்துப் போகத்தக்கதாக பாகிஸ்தான் உளவு ஸ்தாபனமும் செயற்படுகின்றது. காஷ்மீர், பஞ்சாப் தீவிரவாதிளுக்கு ஆயுதங்களை வழங்குவதில் இவ்ஸ்தாபனம் உதவுகின்றது. இந்நிலையில் பெனாசீர் பூட்டோ இவர்களைவிட உயர்ந்தளவில் இந்தியா எதிர்ப்புவாதத்தைப் பேசினாலேயே ஆட்சியில் நிலைக்கக்கூடிய நிலை உள்ளது. ஆனால் பெனாசீர் போர் ஒன்றை நடத்தின் தலையில் தானே மண்ணை அள்ளிப்போடுவதற்கு ஒப்பானதாகும்.

இவ்வாறாக இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டிகள் காஷ்மீர் பிரச்சினை தீவிரமடைவதற்கு வழிவகுத்துள்ளது.

- ஜெயா

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகல சனசமூக நிலைய சம்மேளன உறுப்பினர்களையும் உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்று 21-ஆந் திகதி புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடல் பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயத்தில் நடைபெறும்.

## முகாம்கள் மூடியபின் யாழ்.நகர சுத்திகரிப்பு

(யாழ்ப்பாணம் பெப். 19)

யாழ் நகரைச் சுத்திகரிப்பதில் யாழ். மாநகரசபை ஈடுபட்டுள்ளது. யாழ் நகரப் பகுதியில் இந்திய இராணுவம் தங்கியிருந்த முகாம்களின் முன்னால் இருந்த தடைகளுக்குப் பாவிக்கப் பட்ட கற்கள், மண் என்பன அப்புறப் படுத்தும் வேலைகள் தொடங்கியுள்ளது. இதன் முதல் கட்டமாக யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்னால் உள்ள வீதி மாநகரசபை புள்டோசரால் நேற்று துப்பரவு செய்யப் பட்டது.

# மாற்றுக் குழுக்கள் இட்டசுமைகளை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்

மாற்று இயக்கங்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்ற கருத்தை நிராகரித்த கோபாலசாமி மகேந்திராசா (மாத்தையா) அவர்கள் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தால் உருவாக்கப்பட்ட சட்டவிரோத தேசிய இராணுவத்தின் ஆயுதங்களைக் களைந்தெறிவதில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

இராணுவ தந்திரோபாயமும் புத்திக்கூர்மையும் படைத்த போராளி என இந்திய இராணுவத்தால் வர்ணிக்கப்பட்ட முப்பத்தி நான்கு வயதான திரு. மாத்தையா அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக 1987

## தளபதி மாத்தையா பேட்டி

ஒக்ரோபரில் இந்திய இராணுவத்தால் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் முற்தடவையாக வவுனியாவில் வைத்து பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். ஏனைய குழுக்களைப் பற்றிக் குறிப்பிட்ட திரு. மாத்தையா அவர்கள் அவையெல்லாம், '' இந்திய இராணுவத்தின் கைக்கூலிகள்'' என்றார்.

கடந்த இரண்டு வருடகாலமாக இந்தக் குழுக்களால் மக்கள் மீது சுமத்தப்பட்ட சுமைகளை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். இப்போது இந்தக்குழுக்கள் யாவும் அடித்து விரட்டப்பட்டுவிட்டனர் என்றார்.

இந்திய இராணுவத்தை வெளியேற்றிவிட்டு ஈழப்பிரகடனத்தைச் செய்யும் தந்திரோபாய நோக்குடனேயே விடுதலைப்புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்வதாகக் கூறப்படுவதை திரு. மாத்தையா அவர்கள் முற்றாக நிராகரித்தார். ஈழம் பற்றிய வாதப்பிரதிவாதம் எதுவும் தற்போது எழவில்லை என்று அவர் சொன்னார். நாங்கள் பலமான நிலையில் நின்று கொண்டு தான் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். பிரேமதாசாவின் அரசாங்கம் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றும் என நாம் நம்புகிறோம்.

மேலும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போது இந்திய துருப்புகள் பல இனத்தவர் வாழும் திருகோணமலையை விட்டு வெளியேறினால் இனக் கலவரங்கள் அங்கு தோன்றலாம் என்ற கருத்தை நிராகரித்த மாத்தையா அவர்கள் அரசாங்கம் அவ்வாறானதொரு நிலைமை தோன்றாமல் பாதுகாத்துக் கொள்ளும் என்றார். விடுதலைப்புலிகளுக்கும் - இலங்கை அரசுக்குமிடையில் பல காத்திரமான விடயங்கள் ஆராயப்பட்டதாகக் குறிப்பிட்ட மாத்தையா அவர்கள் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம் பெறும் என்றும் குறிப்பிட்டார். இந்தியத் துருப்புக்கள் வெளியேறிய ஆறுமாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மட்டும் தமிழ்த்தேசியஇராணுவத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது என்று குறிப்பிட்ட மாத்தையா அவர்கள், தேசிய இராணுவத்தின் பெரும்பாலானோர் எம்மிடம் சரண் அடைந்து விட்டார்கள். அவர்கள் மீதான விசாரணைகளின் பின்பு அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். எமது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளவர்கள். மேலும் விசாரணைகளின் பின்பு படிப்படியாக விடுவிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்ட மாத்தையா அவர்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளார்கள்என்ற வதந்தியை முற்றாக மறுத்தார். ஆறுமாவட்டங்களில் ஏற்பட்ட நேரடி மோதல்களில் நூற்றுக்கும் குறைவானவர்களே மரணம்அடைந்ததாகவும் பத்திரிகைகளில் இது குறித்து மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் வெளியாயின என்றும் மாத்தையா அவர்கள் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிப் பொதுச்செயலாளர் யோகரட்ணம் யோகி அவர்கள் எண்ணாயிரம்வரை எண்ணிக்கையில் ஆயுதங்களை இந்தியா சட்டவிரோத தேசிய இராணுவத்திற்கு வழங்கியமை பற்றிக் குறிப்பிட்ட போது அது எண்ணாயிரமோ பத்தாயிரமோ நாங்கள் அது பற்றிக் கவனத்தில் எடுத்துள்ளோம்' என்றார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ஜவான்கள் இன்னும் குடாநாட்டில்

(காழும்பு)

இந்தியக் கப்பல்கள் பாக்கு நீரிணையில் இந்தியத் துருப்புக்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இம்மாதம் முதல் வாரத்தில் 966 சிப்பாய்கள் காங்கேசன் துறையை விட்டு வெளியேறினர் என்றும் குறிப்பிட்ட இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் 400 பேர் வரை கப்பலில் இருந்து இறக்கப்பட்டனர் என்றும் கூறின. இந்த வருட முற்பகுதியிலிருந்து இம்மாதம் நடுப்பகுதி வரை 9859 இந்திய சிப்பாய்கள் வெளியேறிய அதே வேளையில் இக்காலப்பகுதியில் 5259 சிப்பாய்கள் தரையிறக்கப்பட்டனர் என்றும் இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளையில் வலிகாமம் பகுதியின் கரையோர எல்லைப் பிரதேசத்திலும், வடமராட்சிப் பகுதியிலும் இன்னமும் இந்தியத் துருப்புகள் நிலை கொண்டிருப்பதாகத் தம்மைச் சந்தித்த 'லண்டன் ஒப்சேவர்' பத்திரிகை நிருபர்களுக்கு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர்திரு.ஸ்டான்லி டொமினிக் நேற்று தெரிவித்தார்.

## மக்கள் முன்னணி கலாசார விழா

(துணுக்காய்)

நேற்று துணுக்காய் பகுதியில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி நடத்திய கலாசார ரீதியில் நெல் அறுவடை செய்யும் போட்டியில் பின்வருவோர் பரிசு பெற்றனர். பொன். கேதீஸ்வரன், க. மகாலிங்கம், செ. ஜெயராஜா, க. நாகலிங்கம், சந்திரகுமார் ஆகியோராகும். இவ்வைபவத்தில் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் சி. கிருஷ்ணபிள்ளை, பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் வி. சுந்தரம்,விடுதலை முன்னணியின் கலை கலாசார துறை வன்னிப்பிராந்திய பொறுப்பாளர் போசன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.

## கோண்டாவிலில் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்குகிராம சேவகர் பிரிவு குடிபெயர்ந்தவர்களுக்கான இரண்டாம் கட்ட மீளக் குடியமர்தலுக்கான நிவாரணம் வழங்குவதற்கான வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது என கோண்டாவில் கிழக்கு கிராம சேவையாளர் திரு. ச. கனகலிங்கம் தெரிவித்தார்.

## ஆசிரிய நியமனம்

(பண்டத்தரிப்பு)

பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய 13,239 பேரில் இருந்து 1034 இடங்களுக்கே ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நேர்முகப்பரீட்சை நடந்த இடங்களில் இருந்து விபரங்கள் சேகரிக்கப்பட்டு யாழ். கல்வித்திணைக்களத்தில் தரம்பிரித்தல், தெரிவு நடவடிக்கைகள் திங்கட்கிழமை தொடங்கியுள்ளது.

## மைக் கெட்டிங்கின் பரிதாப நிலை

பெரும் சர்ச்சைக்குரியதாக இருந்த இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தென் ஆபிரிக்க விஜயம் புதிய திருப்பமொன்றை அடைந்துள்ளது. முன்னர் தீர்மானித்தமைக்கு மாறாக 2 வது 5 நாள் போட்டியும் (உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட்) இன்னும் இரண்டு ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளும் இன்னும் ஒரு போட்டியுமாக மொத்தம் நான்கு போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்தத்தொடர் ஆரம்பித்த நாளில் இருந்து இன ஒதுக்கலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மைதானங்களில் நடைபெற்றன. இருந்தும் போட்டிகள் கைவிடப்படும் என்று அப்போது தோன்றவில்லை. ஆனால் தற்போதைய தெ. ஆபிரிக்க அரசியல் மாற்றங்கள் இந்த மனமாற்றத்திற்கு வழிகோலியிருக்க வேண்டும். ஆனால் தெ. ஆபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் இந்த நடவடிக்கையில் அர

இதனை எந்தளவு ஏற்றுக் கொள்ள இயலும் என்பது சர்ச்சைக்குரியதே.

மொத்தத்தில் அணித் தலைவர் மைக் கெட்டிங்கும் அவரது குழுவினரும் தான் பெரிதும் பாதிக்கப்படப் போகிறார்கள். ஒப்புக்கொள்ளப் பட்ட இரண்டாவது சுற்றுப் பயணம் நடைபெறுமா என்பதும் அது தொடர்பான லட்சக்கணக்கான டொலர் பணம் இவர்களுக்குக் கிடைக்குமா என்பதும் ஒன்று. இரண்டாவதாக உத்தியோக பூர்வ சர்வதேச கிரிகெட் ஆட்டங்களில் 5வருடங்கள் பங்குபற்ற முடியாமல் தடை செய்யப்பட்டுள்ளமை. இவற்றுக்கெல்லாம் மேலாக ஒடுக்கப் பட்ட தெ. ஆபிரிக்க கறுப்பின மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது, தாம் கிரிக்கெட் ஆடச்சென்றும், அது இடையிலேயே ஏற்பாட்டாளர்களாலேயே குறுக்கப்படுவதுமாகும். இது இவ் விளையாட்டுக் குழுவினருக்கு குறிப்பாக மைக் கெட்டிங்கிற்கு பெரும்








அழகிற்கு
அழகு செய்யும்
அழகிய
தங்கப் பவுண்
நகைகளுக்கு
நதியா ஜுவல்லறி
(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
2, கஸ்தூரியார் வீதி : யாழ்ப்பாணம்.
உங்கள் ஆதரவிற்கு நன்றி

TV TRAVELS & TOURIST

(துணுக்காய்)

நேற்று துணுக்காய் பகுதியில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி நடத்திய கலாசார ரீதியில் நெல் அறுவடை செய்யும் போட்டியில் பின்வருவோர் பரிசு பெற்றனர். பொன். கேதீஸ்வரன், க. மகாலிங்கம், செ. ஜெயராஜா, க. நாகலிங்கம், சந்திரகுமார் ஆகியோராகும். இவ் வைபவத்தில் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் சி. கிருஷ்ணபிள்ளை, பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் வி. சுந்தரம், விடுதலை முன்னணியின் கலை கலாசார துறை வன்னிப்பிராந்திய பொறுப்பாளர் போசன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.

வரை 9859 இந்திய சிப்பாய்கள் வெளியேறிய அதே வேளையில் இக்காலப்பகுதியில் 5259 சிப்பாய்கள் தரையிறக்கப்பட்டனர் என்றும் இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளையில் வலிகாமம் பகுதியின் கரையோர எல்லைப் பிரதேசத்திலும், வடமராட்சிப் பகுதியிலும் இன்னமும் இந்தியத் துருப்புகள் நிலை கொண்டிருப்பதாகத் தம்மைச் சந்தித்த 'லண்டன் ஒப்சேவர்' பத்திரிகை நிருபர்களுக்கு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக் நேற்று தெரிவித்தார்.

மிடையில் பல காத்திரமான விடயங்கள் ஆராயப்பட்டதாகக் குறிப்பிட்ட மாத்தையா அவர்கள் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம் பெறும் என்றும் குறிப்பிட்டார். இந்தியத் துருப்புக்கள் வெளியேறிய ஆறுமாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மட்டும் தமிழ்த்தேசியஇராணுவத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது என்று குறிப்பிட்ட மாத்தையா அவர்கள், தேசிய இராணுவத்தின் பெரும்பாலானோர் எம்மிடம் சரண் அடைந்து விட்டார்கள். அவர்கள் மீதான விசாரணைகளின் பின்பு அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்

மொன்றை அடைந்துள்ளது. முன்னர் தீர்மானித்தமைக்கு மாறாக 2 வது 5 நாள் போட்டியும் (உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட்) இன்னும் இரண்டு ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளும் இன்னும் ஒரு போட்டியுமாக மொத்தம் நான்கு போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்தத்தொடர் ஆரம்பித்த நாளில் இருந்து இன ஒதுக்கலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மைதானங்களில் நடைபெற்றன. இருந்தும் போட்டிகள் கைவிடப்படும் என்று அப்போது தோன்றவில்லை. ஆனால் தற்போதைய தெ. ஆபிரிக்க அரசியல் மாற்றங்கள் இந்த மன மாற்றத்திற்கு வழிகோலியிருக்க வேண்டும். ஆனால் தெ. ஆபிரிக்க கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபைத் தலைவர் இந்த நடவடிக்கையில் அரசாங்கத்தின் நிர்ப்பந்தம் ஏதும் இல்லையென்று கூறுகிறார்.

தலைவர் மைக் கெட்டிங்கும் அவரது குழுவினரும் தான் பெரிதும் பாதிக்கப்படப் போகிறார்கள். ஒப்புக்கொள்ளப் பட்ட இரண்டாவது சுற்றுப் பயணம் நடைபெறுமா என்பதும் அது தொடர்பான லட்சக்கணக்கான டொலர் பணம் இவர்களுக்குக் கிடைக்குமா என்பதும் ஒன்று. இரண்டாவதாக உத்தியோகபூர்வ சர்வதேச கிரிகெட் ஆட்டங்களில் 5வருடங்கள் பங்குபற்ற முடியாமல் தடை செய்யப்பட்டுள்ளமை. இவற்றுக் கெல்லாம் மேலாக ஒடுக்கப் பட்ட தெ. ஆபிரிக்க கறுப்பின மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது, தாம் கிரிக்கெட் ஆடச்சென்றும், அது இடையிலேயே ஏற்பாட்டாளர்களாலேயே குறுக்கப்படுவதுமாகும். இது இவ் விளையாட்டுக் குழுவினருக்கு குறிப்பாக மைக் கெட்டிங்கிற்கு பெரும் அவமானகரமானதாக இருக்கும். என்பதில் ஐயமில்லை.


# TV TRAVELS & TOURIST

## உடனடி வேலை வாய்ப்பு

### KUWAIT

(பிரபல போக்குவரத்துக் கம்பனியில் வேலைவாய்ப்பு)

| | | | |
|---|---|---|---|
| 1. | கனரக சாரதிகள் | 60 பேர் | 70 டினார் |
| 2. | சாதாரண வாகன சாரதிகள் | 40 பேர் | 55 டினார் |
| 3. | ரயர் பிற்றர் | 03 பேர் | 50 டினார் |
| 4. | பெண் செக்ரட்டறி | 01 ஆள் | 90 டினார் |
| 5. | டீசல் மெக்கானிக் | 05 பேர் | 90 டினார் |
| 6. | பெண் கிளீனேர்ஸ் | 50 பேர் | 30 டினார் |

ஒன்றரை மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம். கடவுச்சீட்டு, 3 பாஸ்போட் சைஸ் படம், அனுபவச் சான்றிதழ் என்பனவற்றுடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

★ மற்றும் குவைத் நாட்டிற்கு பணிப் பெண்களாக செல்வோருக்கு இரு வாரத்தில் விசா பெற்றுத் தரப்படும்.

வயது எல்லை ஆண்கள் 20 - 47 வரை
பெண்கள் 30 - 45 வரை

### SAUDI ARABIA

| | | | |
|---|---|---|---|
| 1. | Cleaner | 400 | SR |
| 2. | Plumber | 550 | SR |
| 3. | Electrician | 550 | SR |
| 4. | Carpenter | 550 | SR |
| 5. | Civil Engineer | 1200 | SR |
| 6. | Electric Engineer | 1700 | SR |
| 7. | Telephone Technician | 1000 | SR |
| 8. | Painter | 550 | SR |
| 9. | Waiter | 375 | SR |

கடவுச்சீட்டு, 3 படம், அனுபவச் சான்றிதழ் என்பவற்றுடன் எமது காரியாலயத்தோடு நேரில் தொடர்பு கொள்ளவும்.

வயது எல்லை 21 - 47 வரை

**Front of Railway Station,**
**BROWN ROAD,**
**KOKUVIL.**


## விஷக்குடியின் மரணம் தொடர்கிறது

(சென்னை)

தென் ஆர்க்காட்டில் பண்ருட்டிப் பகுதியில் கள்ளச் சாராயம் அருந்தி மரணமானவர்களின் தொகை இருபத்து நான்காக உயர்ந்துள்ளது. ஏனைய 111 பேர் கண் பார்வை இழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

விஷ அல்ககோல் கலந்த கள்ளச் சாராயத்தை அருந்திய காரணத்தினாலேயே இந்த ஆபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்போரை தமிழ் நாடு சுகாதார அமைச்சர் டாக்டர். பொன்முடி சென்று பார்த்தார்.

கள்ளச்சாராயம் தயாரித்து விற்பனை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும், உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசு உதவிசெய்ய உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், யாழ். கல்வித்திணைக்களத்தோடு இணைந்து, 9ம் ஆண்டு வகுப்புக்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தவிருக்கிறது. இக்கருத்தரங்கு 9 ஆம் ஆண்டுத் தமிழ் பாட நூலை அடிப்படையாகக் கொண்டதாகும். இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர், பண்டிதர் ச. பொன்னுத்துரை, வித்துவான் சி. குமாரசாமி, கலாநிதி. சி. மௌனகுரு, கவிஞர் சோ. பத்மநாதன், திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோர் உரையாளர்களாகக் கலந்து கொள்ளும் இக்கருத்தரங்கின், தலைவர்களாகப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, கல்வியதிகாரிகள் அ. தங்கராசா, ஏ. லி. ஏ. எம். இனானு ஆகியோர் விளங்குவர்.

இரண்டாம் நாள் கருத்தரங்கின் நிறைவு நிகழ்ச்சியாகக் கருத்தரங்கிற் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் ஆ. தி. பா. சங்கம் நடாத்திவரும் பிரவேச பண்டித, பாலபண்டித, பண்டித பரீட்சைகளில் 1989 இலும் அதற்கு முன்பும் தோற்றிச் சித்தி எய்தியோருக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். மேற்படி பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்றுச் சான்றிதழ்களைப் பெறாதிருக்கும் பரீட்சார்த்திகள் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சிக்குச் சமூகமளித்துத் தத்தம் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் பண்டித பரீட்சைச்செயலாளர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சரசர்மா அறிவிக்கின்றார்.


அழகு செய்யும்
அழகிய
தங்கப் பவுண்
நகைகளுக்கு

**நதியா ஜுவல்லறி**
(ஸ்ரான்லி வீதிச் சந்தி)

2, கஸ்தூரியார் வீதி : யாழ்ப்பாணம்.
உங்கள் ஆதரவிற்கு நன்றி



ஈழநாதமே வருக !
எங்கள் வாழ்வு மலர !

**நித்தியகல்யாணி ஜுவல்லறி**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## சகல நிருபர்களுக்கும் ஓர் முக்கிய அறிவித்தல்

முன்னைய "ஈழமுரசு" பத்திரிகைக்குச் செய்தி சேகரித்துக் கடமையாற்றிய யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த சகல நிருபர்களும், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஈழநாதம்" பத்திரிகைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய நிருபர்களும் எதிர்வரும் புதன் கிழமை (21 - 2 - 1990) காலை 10 மணியளவில் இல. 31, வைமன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள "ஈழநாதம்" பத்திரிகை காரியாலயத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆ—ர்

சிந்தனைக்கு

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் - இனி - அஞ்சிடோம்
எந்த நாட்டிலுமிந்த அநீதிகள்
ஏற்குமோ? - தெய்வம் - பார்க்குமோ?

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 21-02-90

# பேசும் பொம்மை!

"ஏமாற்றாதே ஏமாற்றாதே
ஏமாறாதே ஏமாறாதே"

இது ஒரு திரைப்படப் பாடலின் தொடக்க வரிகள்.

நேற்றைய 'ஈழநாதம்' இதழின் முதற்பக்கத்தில் வெளியாகியிருந்த வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ஒரு பத்திரிகைக்கு அளித்திருந்த பேட்டியை வாசித்தவர்களுக்கு இந்த சினிமாப் பாடல் வரிகள் நிச்சயம் நினைவுக்கு வந்திருக்கும்.

"இந்தியா எங்களை ஏமாற்றி விட்டது. இந்திய அரசு தனது பொறுப்பிலிருந்து விலகி வருகிறது. தமிழரின் கோரிக்கை நிறைவேறும் வரை உதவ வேண்டும் என்று கேட்டேன். தமிழர்கள் இந்தியப்படை விலகுவதை விரும்புகிறார்கள் என்று டில்லி கூறிவிட்டது" என்று வரதராஜப்பெருமாள் இந்தப் பேட்டியில் கூறியிருக்கிறார்.

"சட்டி சுட்டதடா
கைவிட்டதடா"

என்ற கண்ணதாசனின் பாடல் போல டில்லி அனுபவித்து உண்மையை உணர்ந்துகொண்டதை வரதராஜப் பெருமாள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை.

எப்படியோ தேர்தல் நடத்தி மாகாண சபை ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்ட வரதராஜப்பெருமாள் குழு எந்தக் காரியத்தை உருப்படியாகச் செய்திருக்கிறதென்று விரல்விட்டு எண்ண முடியுமா?

பொதுமக்களோடு இவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள்? கண்ணியம் என்ற வார்த்தையையாவது இவர்கள் தெரிந்து வைத்திருந்தார்களா?

ஆட்கடத்தல், பிள்ளை பிடித்தல், ஊர்ச் சொத்தை சூறையாடல் - இவர்கள் செய்த சாதனைகள். மக்கள் அனுபவித்த வேதனைகள்!

தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்; அதற்காக இந்தியப்படை இங்கு தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அடிக்கடி டில்லியைக் கேட்டு வந்த வரதராஜப் பெருமாள் குழுவினர் தங்களின் அட்டகாசத்துக்கு இந்தியப்படை துணையாக இருக்கிறதென்பதையும் தங்கள் பாதுகாப்புக்குத்தான் இந்தியா தொடர்ந்திருக்க வேண்டும் என்று கேட்பதையும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. இதுதான் உண்மை.

இந்த உண்மையை டில்லியில் ஆட்சிபீடம் மாறிய பின்னரே இந்தியா புரிந்து கொள்ள முடிந்தது.

தில்லுமுல்லுச் செய்து மாகாணசபை ஆட்சியை எப்படியோ பிடித்துக்கொண்ட வரதராஜப்பெருமாள் குழுவினர் பொதுமக்களின் ஆதரவைப்பெறத் தவறியது மட்டுமல்ல மக்களின் விரோதத்தையும் சம்பாதித்துக்

# சிம்லா ஒப்பந்த முறையில் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு

## சோவியத், பிரான்ஸ், அமெரிக்கா பாக் - இந்தியாவிடம் வலியுறுத்து

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினையால் முறுகல் அடைந்துள்ள இந்தியா - பாகிஸ்தான் உறவை சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்வு காணும்படி இதனோடு சம்பந்தப்பட்ட இரு நாடுகளையும் சோவியத் யூனியன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் கோரியுள்ளன.

சிம்லா ஒப்பந்தம் 1971-ம் ஆண்டு நிகழ்ந்த மூன்றாவது இந்தியா --- பாகிஸ்தான் போரின் பின்னர் நெறிப்படுத்தப்பட்டது. இப் ஒப்பந்தம் மறைந்த பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவிற்கும், மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும் இடையில் சிம்லாவில் செய்யப்பட்டது. பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோ ஆட்சிக்கு வந்ததும் காஷ்மீர் பிரச்சினையை சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்ப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார் என்பறும் குறிப்பிடத்தக்கது. சிம்லா ஒபபந்தத்தின்படி தற்பொழுது பாஸ்கிதானிடம் இருக்கும் காஷ்மீர் பகுதி பாகிஸ்தானிடம் இருக்கவும் இந்தியா விடம் இருக்கும் காஷ்மீர் பகுதி இந்தியாவிற்மும் இருப்பதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## மணிப்பூர் ஆட்சி யாருக்கு; மாலை தெரியும்

(இம்பாலா)

கடந்த வாரம் மணிப்பூரில் நடந்த தேர்தல் வன்முறையினால் வாக்குப்பெட்டிகள் எரிந்த பன்னிரெண்டு தொகுதிகளுக்கான மீள் வாக்குப் பதிவானது நேற்று நடைபெற்றது. இதற்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வாரம் நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் எதிர்க்கட்சிக் கூட்டணியும் தலா 23 இடங்களைப் பெற்றுள்ளன. இன்று வாக்குகள் எண்ணப்படும் பன்னிரெண்டு தொகுதிகளின் முடிவுகளும் வெளிவந்ததும் யார் மணிப்பூரில் ஆட்சி அமைக்கப் போகின்றார்கள் என்பது தெரியவரும்.

## 8 மாதத்தில் 60 லட்சம் ஓசிப் பயணிகள்

(டில்லி)

பயணச் சீட்டின்றிப் பிரயாணம் செய்த 60 லட்சம் பிரயாணிகளை இந்திய புகையிரத பரிசோதனை அதிகாரிகள் கடந்த ஏப்ரல் முதல் டிசம்பர் வரையுள்ள எட்டு மாத, காலப் பகுதிக்குள் பிடித்துள்ளனர். இவ்வாறு பிரயாணம் செய்பவர்களில் அநேகர் உத்தரப் பிரதேசத்தையும், பீகாரையும் சேர்ந்தவர்களாகும். இவர்கள் நெரிசலான புகையிரதங்களில் ஏறி தாங்கள் விரும்பிய இடங்களில் அவசரகால சங்கிலியை இழுத்து விட்டு இறங்கிச் சென்று விடுகின்றார்கள்,

இக் காலப் பகுதியில் நடந்த திடீர் பரிசோதனையின் மூலமே இந் நிலைமை கண்டறியப்பட்டுள்ளது.

நாளாந்தம் 7000 புகையிரத சேவை இந்தியாவில் நடைபெறுகின்றது. இவை மொத்தமாக அறுபத்திஇரண்டாயிரம் கிலோமீற்றர் தூரத்தை ஓடுகின்றன.

## புனர்நிர்மாண வேலைகள்

(கோட்டைக் கல்லாறு)

மட்டக்களப்பில் இயங்கி வரும் சர்வோதய கிளையினர் கடந்தகால வன்செயல்களின் போது இடிக்கப்பட்ட 10 வீடுகளையும், 60 பொது மலசல கூடங்களையும், 15 கிணறுகளையும் வெளிநாட்டு உதவியுடன் புனர்நிர்மாணம் செய்து வருகிறார்கள். பட்டிருப்பு தொகுதியில் உள்ள கோட்டைக்கல்லாறு பகுதியில் இப்புனர் நிர்மாண வேலைகள் இடம்பெறுகின்றன.

## ருமேனியாவில் மீண்டும்....!

(புக்காரெஸ்ட்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை ருமேனிய அரச செயலகத்தில் பல நூற்றுக்கணக்கானோர் சூழ்ந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்பொழுது அச் செயலகத்தில் இருந்த உதவிப் பிரதமர் வைக்கன் தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் இராணுவத்தினர் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இச் சம்பவம் பற்றி உதவிப் பிரதமர் கருத்துத் தெரிவித்த போது இது ஓர் திட்டமிட்ட சதி எனத் தெரிவித்தார்.

## நோர்வேயும் தமிழ் அகதிகளை திருப்பிவிடும்?

(ஒஸ்லோ)

அகதிகள் தஞ்சம் கோரி

அவசியம் தானா என்பது பற்றி நோர்வே

## ஊர்சுற்றி எழுதுவது

இருபத்தொன்பது ஆண்டுகளுக்குமுன் பெப்ரவரி இருபதாம் தேதி ஆரம்பமான ஒரு நிகழ்ச்சி நேற்று திரைப்படம் போல் என் மனக்கண்ணில் தோன்றியது.

இத்தினத்தில் தான் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாகத்தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரக - மறியல் - போராட்டத்தைத் தொடங்கினர்.

அரசாங்க அதிபராக இருந்த எம். ஸ்ரீகாந்தா உயர்நீதிமன்றம் தொடங்குவதற்கான கட்டளையைக் கொண்டு செல்லாமல் தடுப்பதற்குப் பழைய பூங்கா வாசலில் தமிழரசுக்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் குறுக்கே இருந்தனர். சகல வாசல்களிலும் இவர்கள் இப்படி மறியல் செய்து கொண்டிருந்தனர். பொலிசார் சூழ்ந்து நின்றனர். என்ன நடக்குமோ என்பதைப் பார்க்கப் பொதுமக்கள் திரண்டு நின்றனர். பழைய பூங்கா வாசலில் தொண்டர்கள் மத்தியில் டாக்டர் இ. மு. வி. நாகநாதனும் பழைய கச்சேரி வாசலில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் தொண்டர்கள் மத்தியில் இருந்தனர்.

பொலிசார் சடுகுடு விளையாடுவது போல் தொண்டர்களையும் தலைவர்களையும் வெளியே இழுத்துவழிவிடச் செய்வதற்குப் பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தனர்.

'ஈழநாடு' தினசரிப் பத்திரிகையாக வெளிவந்து ஒன்பதே நாள்தான்.

சத்தியாக் கிரகம் ஆரம்பமான அன்று நண்பகலில் ஒரு விசேஷ பதிப்பை வெளியிடத் தீர்மானித்திருந்தோம். காலையில் கச்சேரிப்பகுதிக்குச் சென்று சம்பவங்களைப் பார்த்து அலுவலகம் திரும்பி எல்லாவற்றையும் எழுதி விசேஷ பதிப்புக்கு ஏற்பாடு செய்திருந்தேன்.

பக்கங்கள் அச்சுயந்திரத்தில் வைக்கப்பட்டு அச்சடிக்கத் தயாராகிவிட்டது.

கச்சேரியடியில் நின்ற எனது பத்திரிகை நண்பர்களான ஸி. ரி. சொலமன், வீரகேசரி செல்லத்துரை ஆகியோரிடம் "விசேஷம்" இருந்தால் உடன் அறிவிக்கும்படி கூறிவிட்டு வந்திருந்தேன்.

நண்பகல் அவர்களிருவரும் தொலைபேசியில் தொடர்புகொண்டு பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்ததாகவும் ஆகாயத்தை நோக்கிச் சுட்டதாகவும் சத்தியாக்கிரகம் அன்றைய தினம் ஒத்திவைக்கப்பட்டதாகவும் அவர்களிருவரும் தெரிவித்தனர்.

அச்சுவாகனத்தில் ஏற்றப்பட்டிருந்த பக்கத் தலைப்பில் கடைசிச் செய்தியை அவசர அவசரமாக அச்சுக்கோர்த்து பக்கத்தில் போட்டுத் தலைப்பையும் மாற்றிப் பத்திரிகையை அச்சடித்து பிற்பகலில் வெளியிட்டோம்.

கச்சேரியாயிலிருந்து அடி வாங்கிக் கொண்டு பஸ் நிலையத்துக்கு வந்தவர்களுக்கு அந்தச் செய்திகளைத் தாங்கிக் கொண்டு ஈழநாடு, பத்திரிகை விற்பனையாகிக் கொண்டிருந்தது. பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மறுநாள் மீண்டும் கச்சேரி முன் தொடர்ந்த சத்தியாக்கிரகம் இதர அரச அலுவலகங்கள் முன்னும் பரவி வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கும் வியாபித்தது.

இந்தச் சத்தியாக்கிரகத்தில் போய் ஒருநேரமாவது உட்கார்ந்திராவிட்டால் பிறவியெடுத்தும் பயன் இல்லை என்று மக்கள் கருதும் அளவுக்கு சத்தியாக்கிரகம் பெரும் மக்கள் எழுச்சியாக உருவெடுத்தது. இதற்கு அன்றைய ஈழநாடு பத்திரிகைக்கு நிறையப் பங்குண்டு!

மாபெரும் மக்கள் எழுச்சியை தமிழரசுக்கட்சி சரியான வழியில் பயன்படுத்தத் தவறியதால் தமிழ்ச் சமுதாயத்துக்கு அந்த சத்தியாக்கிரகம் தீமையாகவே முடிந்தது.

★

எந்தக் காரியத்தை உருப்படியாகச் செய்திருக்கிறதென்று விரல்விட்டு எண்ண முடியுமா?

பொதுமக்களோடு இவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள்? கண்ணியம் என்ற வார்த்தையையாவது இவர்கள் தெரிந்து வைத்திருந்தார்களா?

ஆட்கடத்தல், பிள்ளை பிடித்தல், ஊர்ச் சொத்தை சூறையாடல் - இவர்கள் செய்த சாதனைகள். மக்கள் அனுபவித்த வேதனைகள்!

தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்; அதற்காக இந்தியப்படை இங்கு தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அடிக்கடி டில்லியைக் கேட்டு வந்த வரதராஜப்பெருமாள் குழுவினர் தங்களின் அட்டகாசத்துக்கு இந்தியப்படை துணையாக இருக்கிறதென்பதையும் தங்கள் பாதுகாப்புக்குத்தான் இந்தியா தொடர்ந்திருக்க வேண்டும் என்று கேட்பதையும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. இதுதான் உண்மை.

இந்த உண்மையை டில்லியில் ஆட்சிபீடம் மாறிய பின்னரே இந்தியா புரிந்து கொள்ள முடிந்தது.

தில்லுமுல்லுச் செய்து மாகாணசபை ஆட்சியை எப்படியோ பிடித்துக்கொண்ட வரதராஜப்பெருமாள் குழுவினர் பொதுமக்களின் ஆதரவைப்பெறத் தவறியது மட்டுமல்ல மக்களின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டார்களென்பதையும் டில்லி காலம் கடந்தே உணர்ந்து கொண்டது.

தேவையற்ற ஒரு சண்டையில் இந்தியா வீணாக உயிரையும் உடமைகளையும் இழந்துகொண்டிருப்பதையும் டில்லி காலங்கடந்தே புரிந்து கொண்டது.

இவற்றைவிட வரதராஜப்பெருமாள் குழுவினர் டில்லியையே ஏமாற்றி வந்திருக்கிறதென்பதை கடைசி நேரத்தில்தான் கற்றுக் கொண்டனர்.

"கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு" என்று சொல்வார்கள். வரதராஜப்பெருமாள் குழுவினர் பல மாதங்களாக டில்லியையும் தமிழ் நாட்டையும் ஏமாற்றி வந்திருக்கின்றனர்.

"எங்களுக்கு அதிகாரம் தரப்படவில்லை; பிரேமதாசா ஏமாற்றி விட்டார்" என்றும் வரதராஜப்பெருமாள் கூறுகிறார்.

அதிகாரம் தர வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதியை வற்புறுத்திக் கேட்டிருக்க வேண்டும்; அல்லது அதற்காக ஒரு போராட்டமே நடத்தியிருக்க வேண்டும். இதைவிடுத்து டில்லிக்குக் காவடி எடுத்து என்ன பயன்?

அதிகாரமில்லாமல் வெறும் பொம்மையாக இவ்வளவு மாதங்களும் ஏன் முதலமைச்சர் என்ற பதவியைச் சுமந்திருக்க வேண்டும்.

அதிகாரமில்லாத ஒரு சபை தேவைதானா என்று உரக்கக்கேட்டு விட்டு போனால் போகட்டும் போடா" என்று வரதராஜப்பெருமாள் குழுவினர் பதவிகளை உதறித் தள்ளிவிட்டுப் போயிருக்கலாமே.

தமிழக முதல்வர் கருணாநிதி புலிகளின் பக்கம் நிற்பதாகவும் வரதராஜப்பெருமாள் கூறுகிறார்.

"காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்" என்பதுபோல் வரதராஜப்பெருமாளுக்கு இப்போது அப்படித்தான் தெரியும்!

"எத்தனை காலம் தான் ... ...
ஏமாற்றுவார் இந்த நாட்டிலே"

என்ற மற்றொரு திரைப்பாடல்போல இனியும் ஏமாற்ற முடியாது என்ற நிலையை வரதராஜப்பெருமாள் குழுவினர் நன்கு புரிந்துகொண்டு நடையைக்கட்டவேண்டியது தானே!

பாவம் கீழ் மட்டத்தினர் அங்குமிங்கும் அலைந்து திரிகிறார்கள். மேல் மட்டத்தினர் இன்னமும் இந்தியாவை ஏமாற்றி வசதி தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

டில்லியும் ஈழத் தமிழ் மக்களையும் இலங்கையையும் ஏமாற்றித் தோல்வி கண்டிருக்கிறது. இனியும் அது ஏமாறுமா ஏமாற்றுமா என்பதை காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

(டில்லி)

பயணச்சீட்டின்றிப் பிரயாணம் செய்த 60 லட்சம் பிரயாணிகளை இந்திய புகையிரத பரிசோதனை அதிகாரிகள் கடந்த ஏப்ரல் முதல் டிசம்பர் வரையுள்ள எட்டு மாத, காலப் பகுதிக்குள் பிடித்துள்ளனர். இவ்வாறு பிரயாணம் செய்பவர்களில் அநேகர் உத்தரப் பிரதேசத்தையும், பீகாரையும் சேர்ந்தவர்களாகும். இவர்கள் நெரிசலான புகையிரதங்களில் ஏறி தாங்கள் விரும்பிய இடங்களில் அவசரகால சங்கிலியை இழுத்து விட்டு இறங்கிச் சென்று விடுகின்றார்கள்,

இக் காலப் பகுதியில் நடந்த திடீர் பரிசோதனையின் மூலமே இந் நிலைமை கண்டறியப்பட்டுள்ளது.

நாளாந்தம் 7000 புகையிரத சேவை இந்தியாவில் நடைபெறுகின்றது. இவை மொத்தமாக அறுபத்திஇரண்டாயிரம் கிலோமீற்றர் தூரத்தை ஓடுகின்றன.

# நோர்வேயும் தமிழ் அகதிகளை திருப்பிவிடும்?

(ஒஸ்லோ)

அகதிள் தஞ்சம் கோரி நோர்வே நாட்டில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்க நோர்வே அரசு ஆலோசித்து வருவதாகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

தற்போது இலங்கைத் தமிழ்ப் பகுதிகளிலிருந்து அமைதிப் படையினர் வெளியேறுவதையடுத்து, அப்பகுதிகளில் அமைதி நிலவுகிறது என்றும் இனிமேல் தமிழ்பக்கள் நோர்வே நாட்டில் அகதிகளாக இருக்கவேண்டியது அவசியம் தானா என்பது பற்றி நோர்வே அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்கத்துடன் பேசி ஆராய்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை உட்பட வன்முறைச் சம்பவங்கள் நிகழ்கிற நாடுகளான ஈரான், ஆப்கானிஸ்தான், லெபனான் போன்ற இடங்களிலிடுந்து வந்து நோர்வேயில் அகதிகள் அந்தஸ்து பெற்றவர்களையும் அந்தந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்க நோர்வே அரசு ஆலோசனை செய்திருப்பதாகவும் அச்செய்தி தெரிவிக்கிறது. (தி)

றன.

## ருமேனியாவில் மீண்டும்....!

(புக்காரெஸ்ட்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை ருமேனிய அரச செயலகத்தில் பல நூற்றுக்கணக்கானோர் சூழ்ந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்பொழுது அச் செயலகத்தில் இருந்த உதவிப் பிரதமர் வைக்கன் தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் இராணுவத்தினர் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இச் சம்பவம் பற்றி உதவிப் பிரதமர் கருத்துத் தெரிவித்த போது இது ஓர் திட்டமிட்ட சதி எனத் தெரிவித்தார்.

## உழவுயந்திரங்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள்புனர்வாழ்வு புனர்நிர்மான பகுதியால் யாழ் கமநலச் சேவை நிலையத்துக்கு வழங்கப்பட்டிருந்த ஆறு உழவு இயந்திரங்களும் யாழ்.குடா நாட்டில் உள்ள கமநலச் சேவை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த உழவு யந்திரங்கள் சில மாதங்களாக பயன்படுத்தப்படாமல் இருந்தன.

நேற்று இவ்வுளவு இயந்திரங்களுக்கான ஆறு இழுவைப் பெட்டிகளை ஐக்கிய நாடுகள் புனர்வாழ்வு, புனர்நிளமான ஸ்தாபனம் வழங்கியது. (தி)

## மக்கள் கருத்து

# முறைப்படி அமைந்த சபையா?

இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி தமிழக முதல்வர் - ஈ. பி. ஆர். எல். எவ். பேச்சு வார்த்தைகளின் பின், முறைப்படி அமைக்கப்பட்ட மாகாண சபையை கலைக்க முயல்வது பொறுப்பற்ற செயலாகும் என்று ஈ. பி. ஆர். எல். எவ். நாடாளுமன்ற பிரதிநிதி க. பிரேமச்சந்திரன் தெரிவித்ததாக இன்றைய தமிழ்த் தினசரிகளில் பார்த்தேன்.

இன்றைய மாகாணசபை முறைப்படி, உரிய முறையில் -ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்பட்டு, உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு- அமைக்கப்படவில்லை என்பது உலகறிந்த உண்மை.

நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்ட தினம், யாழ்ப்பாண செயலகத்திற்குள், ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட, இந்திய அதிகாரிகளுக்கு, உடந்தையான ஈ. பி. ஆர். எல். எவ். வும் பிற இயக்கங்களுமே அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர், வீதித்தடையிடப்பட்டு, தடுக்கப்பட்டனர்.

ஈ. பி. ஆர். எல். எவ். வேட்பாளர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்று 'தம்பட்டமடிக்க' இச் சூழ்நிலை சாதகமாக இருந்தது, இந்திய இராணுவப் படையும் உதவினர்.

நிலைமை இப்படியிருக்க, முறைப்படி அமைக்கப்பட்ட மாகாண சபை என்று இன்றும்கூட, ஒருவர் கூறுவது நகைப்பிற்கிடமானது.

## வசதிக் கட்டணம்!

ஐயா,

இப்பொழுது பாடசாலை மாணவர்களுக்கான வசதிக் கட்டணத்தை மூன்று தவணைக்கான தொகையையும் ஆரம்பத்திலேயே பெற்று விடுகிறார்கள். இதனால் வசதி குறைந்த பெற்றோர் அத்தொகையினை செலுத்துவதற்கு பெரும் கஷ்டப்படுகிறார்கள். மேலும் சில மாணவர்கள் அத்தொகையை உடனே கொடுத்து விடுவதால், இவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது. இக் கடிதம் மூலமாக இப்படியும் ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இலவசக் கல்வியில் இப்படியும்ஒரு சங்கடமா?

-எம். ராஜேஸ்

யாழ்ப்பாணம்

# போக்குவரத்து ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அமைதியைத் தொடர்ந்து வீதிகளிலும் நகரப் பகுதிகளிலும் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன. முன்னைய காலங்களில் அவசரகால நிலைமைகளை யொட்டி யாழ். நகரப்பகுதிகளில் உள்ள ஒரு வழிப் பாதைகள் இரு வழிப் பாதைகளாகப் பாவிக்கப்பட்டன. இதனால் பாதசாரிகளுக்கு பல சிரமங்கள் ஏற்பட்டன. ஆனால் தற்பொழுது அமைதி நிலவுவதால் வாகனங்கள் ஒரு வழிப் பாதைகளாக பிரயாணம் செய்வதற்கான வழி வகைகளை உரியவர்கள் கவனிக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

-சதாசிவம்

சண்டிலிப்பாய்

வர்களையும் வெளியே இழுத்துவழிவிடச் செய்வதற்குப் பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தனர்.

'ஈழநாடு' தினசரிப் பத்திரிகையாக வெளிவந்து ஒன்பதே நாள்தான்.

சத்தியாக்கிரகம் ஆரம்பமான அன்று நண்பகலில் ஒரு விசேஷ பதிப்பை வெளியிடத் தீர்மானித்திருந்தோம். காலையில் கச்சேரிப்பகுதிக்குச் சென்று சம்பவங்களைப் பார்த்து அலுவலகம் திரும்பி எல்லாவற்றையும் எழுதி விசேஷ பதிப்புக்கு ஏற்பாடு செய்திருந்தேன்.

பக்கங்கள் அச்சுயந்திரத்தில் போய் ஒருநேரமாவது உட்கார்ந்திராவிட்டால் பிறவியெடுத்தும் பயன் இல்லை என்று மக்கள் கருதும் அளவுக்கு சத்தியாக்கிரகம் பெரும் மக்கள் எழுச்சியாக உருவெடுத்தது. இதற்கு அன்றைய ஈழநாடு பத்திரிகைக்கு நிறையப் பங்குண்டு!

மாபெரும் மக்கள் எழுச்சியை தமிழரசுக்கட்சி சரியான வழியில் பயன்படுத்தத் தவறியதால் தமிழ்ச் சமுதாயத்துக்கு அந்த சத்தியாக்கிரகம் தீமையாகவே முடிந்தது.

★

## இந்தப் பெண் யார்?

(யாழ்ப்பாணம்)

கடந்த 15ஆம் திகதி யாழ். பஸ் நிலையப்பகுதியில் கிடந்த பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

சுமார் 55 வயது மதிக்கத்தக்க அப்பெண்ணின் உயரம் 5 அடி 2 அங்குலம் என்று யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (தி)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. வன்முறைச் சம்பவங்கள் காரணமாக சில வருடங்கள் திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி விழா சாதாரணமாகவே நடைபெற்று வந்தது.

வழமையை விட இம் முறை நடைபெறும் சிவராத்திரி விழாவிற்கு திருக்கேதீஸ்வரத்தில் ஏராளமான பக்தர்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (தி)

(4 ஆம் பக்க தொடர்ச்சி)

## மாற்றுக் குழுக்கள்

இந்திய இராணுவத்திற்கு எதிரான யுத்தத்தில் விடுதலைப்புலிகளின் மிக உயர்ந்த இராணுவ தொழில் நுட்பம் பற்றியும் போராளிகளின் அர்ப்பணிப்புகள் பற்றியும் மாத்தையா அவர்கள் எடுத்துரைத்தார். இந்த யுத்தத்தில் தானும் ஒரு சில யார் தூர இடைவெளியில் இந்திய இராணுவத்தைச் சந்திக்க வேண்டியதாயிற்று என்று குறிப்பிட்ட திரு. மாத்தையா அவர்கள் தமது இயக்கத்தின் 17 வருடகால தலைமறைவு இயக்க நடவடிக்கைகளுக்குப் பின்னர் தமிழ் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பதாகவும் குறிப்பிட்டார். தலைவர் பிரபாகரன் அவர்கள் தேவைப்படும்போது வெளியே வந்து இயக்க வேலைகளில் ஈடுபடுவார் என்றும் மாத்தையா சொன்னார்.

இந்தியாவின் எதிர்கால நடவடிக்கைகள் எப்படி அமைய வேண்டும் என்று திரு. மாத்தையா அவர்களிடம் கேட்கப்பட்டபோது அவர் பின்வருமாறு சொன்னார். அதாவது இந்தியா தனது வெளியுறவுக் கொள்கைகளை வகுக்கும் போது இலங்கையில் வாழும் தமிழ் - முஸ்லிம் சமூகத்தினரின் உணர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டும். 1987-ஆம் ஆண்டு இலங்கை — இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டபோது நடந்துகொண்டது போல் நடந்து கொள்ளக் கூடாது. இந்தியா எந்தவகையிலும் இலங்கைத்தீவின் உள்விவகாரங்களில் அரசியல் ரீதியாகவோ இராணுவ ரீதியாகவோ தலையிடக் கூடாது.

இலங்கைத்தீவை விட்டு இந்தியத்துருப்புக்கள் வெளியேறிய பின்னர் இலங்கை அரசாங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத் தேர்தலுக்கான புதிய திகதியை நிர்ணயம் செய்யும் என்றும் அந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தாமே தெரிவு செய்யக் கூடியவகையில் சுதந்திரமாக மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க எல்லாக்குழுக்களும் இடமளிக்கவேண்டும் என்றும் திரு. மாத்தையா அவர்கள் கேட்டுக்கொண்டார்.

நன்றி:- சண்டே மைரஸ்

ஈழநாதம்

# நாமும் அணுகுண்டு தயாரிக்க நேரிடும்

(புதுடில்லி)

பாகிஸ்தான் அணுகுண்டை உற்பத்தி செய்யுமேயானால் இந்தியா தனது அணுசக்தி தொடர்பான கொள்கையை மாற்றவேண்டிவரும் என இந்தியப் பிரதமர் வி. பி. சிங், எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தான் இராணுவ தேவைகளுக்குஅணுசக்தியைப் பயன்படுத்துமானால் அது பிராந்திய சூழலில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அதனால் இந்தியா தனது அணுசக்திக் கொள் கையை மறுபரிசீலனை செய்ய வேண்டிவரும் என வி. பி. சிங் தெரிவித்தார்.

அதேவேளை அணுக்குண்டைத் தயாரிக்கும் ஆற்றல் இரு நாடுகளிலும் இருப்பதாக மேற்கத்தைய இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்திய துணைப் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும்பேராசிரியர் ராமண்ணா முன்னர் இந்திய அணுசக்தி ஆய்வு நிறுவனத்தின் தலைவராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒரு வருடமாக கூட்டம் இல்லை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன்ம் (ரி. ஆர். ஆர். ஓ.) கடந்த ஒரு வருடகாலமாக தனது நிர்வாக சபைக் கூட்டத்தை கூட்டவில்லை எனத் தெரியவருகின்றது. இந் நிறுவனத்திற்கான நிதி உதவி மனித நேய அடிப்படையில் வெளி நாடுகளிலிருந்து கிடைக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## வரி மதிப்பீடு மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை நிர்வாக எல்லைக்குள் 1974 ஆம் ஆண்டு வரிமதிப்பீடு திரும்ப மீளாய்வு செய்யப்படுகிறது.

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை செய்யப்படவேண்டிய இவ் வரிமதிப்பீடு நாட்டு நிலைமை காரணமாகச் செய்யப்படவில்லை. யாழ். மாநகரசபைக்காக விலை மதிப்புக் இணைக்களம் இந்த மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளது.

# கடத்தப்பட்ட சொய்சா சடலமாக மீட்கப்பட்டார்

(கொழும்பு)

முன்னாள் ரூபவாகினி அறிவிப்பாளரும் பத்திரிகையாளருமான றிச்சர்ட் டி சொய்சா கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை வெலிக்கடையிலுள்ள அவர் வீட்டிலிருந்து ஆயுத பாணிகளால் கடத்திச் செல்லப்பட்டார். கடத்திச் செல்லப்பட்ட சொய்சாவின் சடலம் திங்கட்கிழமை மாலை மொறட்டுவையில் உள்ள கோறலவெல்ல கடற்கரையில் ஒதுங்கியிருக்கக் காணப்பட்டது.

திருமதி சவரிமுத்து. கலுபோவில்ல ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சொய்சாவின் சடலத்தை தன் மகனுடையது என திங்கள் மாலை 9.45 மணி அளவில் அடையாளம் காட்டினார்.

ஆஸ்பத்திரிக்கு விரைந்து சொய்சாவின் சடலத்தைப் வகித்துப் பேசிய தம்பலகா பார்வையிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் அவரை மிகக் கிட்டிய தூரத்தில் இருந்து சுட்டிருக்க வேண்டும் என்று கருத்துத்தெரிவித்தனர். தலையின் பின்புறம் துப்பாக்கி ரவைகள் பாய்ந்ததால்சிதறிக் காணப்பட்டது. கழுத்திலும் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது.

சடலம் உவர்ப்பான கடல் நீரில் கிடந்ததினால் கரிய நிறமாக மாறி இருந்தது. சுமார் 24 மணி நேரம் சடலம் கடலில் கிடந்திருக்கலாம் என்று பொலிஸ் அதிகாரிகள் கருதுகின்றனர். நிர்வாணமாகவிருந்த உடல் சிதைந்த நிலையில் காணப்பட்டது. உறவினரும் நண்பர்களும் சடலத்தை அடையாளம் காண முடியாது தடுமாறினர். முகம் அடையாளம் காணமுடியாதிருந்தும்; சொய்சாவுக்கு நெருக்கமானவர்கள் சடலம் சொய்சாவுடையது தான் என்று சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறினர்.

மகன் இறந்த செய்தியை அறிந்ததும், தாயார் உறவினரின் உதவியுடன் கார் ஒன்றில் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார். மகனின் சடலத்தை அடையாளம் காட்டிய பிறகு மயக்கமுற்ற நிலையில் காணப்பட்டார். ஆயுதந்தாங்கிய பொலிஸார் பிரேத அறையைச் சுற்றிக் காவலில் நின்றனர். கொலை தொடர்பான மரணத்தை விசாரணை செய்யும் படி உயர் மட்டப் பொலிஸ் அதிகாரிகளால் உடன் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

திங்கள் மாலை கோறல ...

உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் எம். ஜ. மிஸ்கின் ரூபவாகினியில் சொய்சாவின் படங்களைப் பார்த்ததிலிருந்து, அது சொய்சாவுடையது தான் என இனம் கண்டார்.

காலஞ்சென்ற சொய்சா ரூபவாகினி அறிவிப்பாளரும், பத்திரிகையாளரும், நாடக நடிகருமாவார்.

கொழும்பு மொரட்டுவ கடற்கரையில் காணப்பட்ட றிச்சாட் டீ சொய்சாவின் சடலத்தை அடையாளம் காட்டிய அவரது தாயார் மனோகரி சவரிமுத்து அவர்கள் தமது மகனைக் கடத்தியவர்களில் ஒருவர் பொலிசாரின் யூனிபோம் அணிந்து இருந்தார் என்றும், இதனாலேயே பொலிசாருக்கும் - இவரது மரணத்துடன் தொடர்புண்டு எனத்தான் குறிப்பிட்டதாகவும் பிலிப்பைன்ஸ் வானொலி கடந்த இரவு தெரிவித்தது.

### தமிழ்ப் பெண்களுக்கான தமிழ்த் தேசிய உடை

'தமிழ்ப் பெண்களின் உடை தமிழ் தேசிய முறையில் கௌரவமானதாக இருக்க வேண்டும்' என்று தம்பலகாமம் கள்ளிமேடு, வெள்ளைப் பிள்ளையார் ஆலயமண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தலைமை மம்-பற்று விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் பிரமுகர் ஜி. எஸ். மூர்த்தி கூறினார்.

# பாலியல் படங்களுக்கு பல கோடி ரூபா - ரூபவாகினி

(கொழும்பு)

பல கோடி ரூபா செலவில் சிங்கப்பூர், ஹொங்கொங் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஒழுக்கக் கேடான பாலுறவுப் படங்களை இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்துள்ளதென்றும், இப்படங்கள் அடுத்துவரும் மூன்று வருடங்களுக்கு ரூபவாகினியில் காட்டப்போதுமானதென்றும் தகவல் ஒளிபரப்பு அமைச்சர் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் இப்படங்களில் சில குப்பையில் போடத்தான் தகுதியானவை என்றும், இப்படங்களின் இறக்குமதி ஸ்ரீ லங்கா ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்துக்குப் பல கோடி ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், ஸ்ரீ லங்காவில் காலிமுகக் கடற்கரைப் புற்தரையில் குடை மறைவில் ஒழிந்து கொண்டு காதல் இன்பக் கேளிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். மற்றவர்கள் வெளிப்படையாகச் செய்வதை நாம் ஒழிந்துகொண்டுசெல்கிறோம் என்பதுதான் இதன்அர்த்தம். இதனால் எமது வெளியூர் ஒழிபரப்பை கைவிடுவது என்பதல்ல. எமது சிறார்களுக்குப் பொருத்தமான படங்களை நாம் தெரிந்தெடுத்தே ரூபவாகினியில் ஒழிபரப்பு செய்யவேண்டும் என்றார்.

## இ. போ. ச. வுக்கு 40 கோடி ரூபா

(கொழும்பு)

பழுதடைந்த நிலையிலுள்ள இ. போ. சபைக்கு சொந்தமான 2000 பேரூந்துகளுக்கு உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்காக 10 கோடி ரூபாய்களை வழங்கும்படி திறைச்சேரிக்கு இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா பணித்துள்ளார். இந்தப் 10 கோடி ரூபாவுக்கான உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வத மூலம் சீர்குலைந்துள்ள போக்குவரத்து சேவையை சீர்திருத்தி திறம்பட செயல்படவைக்க முடியும்என எதிர்பார்க்கப்படுகிறது.

## லொறிகள் கொள்ளை

(வவுனியா)

மன்னார் - வவுனியா வீதியில் இரண்டு லொறிகள் கொள்ளையடிக்கப்பட்டன. ஒரு லொறி பதினெட்டாம் திகதி இரவும், மற்றையது பத்தொன்பதாம் திகதி இரவும் கொள்ளையடிக்கப்பட்டது. லொறிகள் இரண்டிலும் இருந்து மொத்தமாக 25,400 ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது. கொள்ளையில் நான்கு பேர் ஈடுபட்டதாகவும் இவர்கள் கறுப்பு உடுப்புக்கள் அணிந்துள்ளதாகவும், துப்பாக்கி, கத்தி போன்ற ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் எனவும் தெரியவருகின்றது.

## அமைதிப்படைமீது கெரிலாத்தாக்குதல் 2 பேர்பலி 6 பேர் படுகாயம்

(பெய்ரூட்)

கடந்த திங்கட்கிழமை தென்லெபனானில் ரோந்து சுற்றிக் கொண்டு வந்த ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படை வீரர்கள் மீது நடத்தப்பட்ட கொரில்லாத் தாக்குதலில் ஐ. நா. அமைதி காக்கும் படையைச் சேர்ந்த நேபாள நாட்டு இராணுவ வீரர்கள் இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஆறு பேர் படுகாயம் அடைந்தார்கள். இஸ்ரவேலின் ஆதரவோடு தென்லெபனானில் இயங்கி கொண்டு இருக்கின்ற ஹிஸ்புல்லா கெரில்லாக்களுக்கு மிடையில் ஏற்பட்ட மோதலில்தான் மேற்படி நேபாள வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் கூறியுள்ளது இதனை மறுத்த ஐ. நா. அதிகாரிகள் அப்பகுதியில் ஹிஸ்புல்லா வீரர்களே கிடையாது என்றும் கூறியுள்ளனர்.

## நன்றி

இன்றைய பத்திரிகையில் மூன்றாம் பக்கத்தில் வெளி ...

## தொண்டர்கள் தொண்டு

(கொழும்புத்துறை)

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை சைவத் தொண்டர்கள் தொண்டர் சேவைசெய்ய உள்ளார்கள். இதற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் மாவட்ட சைவநெறித் தொண்டர் கழகம் மேற்கொண்டு வருகின்றது. கடந்த பல வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட நிலைமை காரணமாக இச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுப் புதிதாகத் தொண்டர் இருபா ...

## பிரேமதாசா

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டிருக்கிறது. முதல்வர் இலங்கை அரசின் சட்டதிட்டங்களை மீறினார் என்று குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

சென்னையில் ஈழத் தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய முதல்வர் கருணாநிதி ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ் ரெலோ ஆகிய கூட்டணியினர் தாங்களாகவே பதவிகளை ராஜினாமாச் செய்து வடக்கு கிழக்கு மாகாணசபை ஆட்சியை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கலாமென்று யோசனை தெரிவித்ததாகவும் செய்திகள் அறிவித்தன.

## மாகாணசபை கூட்டில் வந்த பிளவு

தேசிய முன்னணி என்ற பெயரில் அமைந்திருந்த கூட்டமைப்பிலிருந்து ஈ. பி. ஆர். எல். எவ். சமீபத்தில் விலகிக் ...

கிழக்கு மாகாணசபை ஸ்திரமற்றுப் போய்விட்டதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

சொய்சாவின் சடலத்தைப்

முடியாது தடுமாறினார். ... அடையாளம் காணமுடியாதிருந்தும்; சொய்சாவுக்கு நெருக்கமானவர்கள் சடலம் சொய்சாவுடையதுதான் என்று சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறினர்.

மகன் இறந்த செய்தியை அறிந்ததும், தாயார் உறவினரின் உதவியுடன் கார் ஒன்றில் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார். மகனின் சடலத்தை அடையாளம் காட்டிய பிறகு மயக்கமுற்ற நிலையில் காணப்பட்டார். ஆயுதந்தாங்கிய பொலிஸார் பிரேத அறையைச் சுற்றிக் காவலில் நின்றனர். கொலை தொடர்பான மர்மத்தை விசாரணை செய்யும்படி உயர் மட்டப் பொலிஸ் அதிகாரிகளால் உடன் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

திங்கள் மாலை கோறலவெல்ல கடற்கரைக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் சடலம் கரை ஒதுங்கியிருப்பதைக் கண்டு மொறட்டுவ பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர். சடலத்தை முதலில் பார்வையிட்ட மொறட்டுவ

எனத்தான் குறிப்பிட்டதாகவும் பிலிப்பைன்ஸ் வானொலி கடந்த இரவு தெரிவித்தது.

விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புற்தரையில் குடை மறைவில்

செய்யவேண்டும் என்றார்.

எனவும் தெரியவருகின்றது.

## தமிழ்ப் பெண்களுக்கான தமிழ்த் தேசிய உடை

'தமிழ்ப் பெண்களின் உடை தமிழ் தேசிய முறையில் கௌரவமானதாக இருக்க வேண்டும்' என்று தம்பலகாமம் கள்ளிமேடு, வெள்ளைப் பிள்ளையார் ஆலயமண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தலைமை மம்-பற்று விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் பிரமுகர் ஜி. எஸ். மூர்த்தி கூறினார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## இனி பேராதனை பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடக்கும்

(பேராதனை)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தம்மை வெளிவாரி மாணவர்களாகப் பதிவு செய்து கொண்ட மாணவர்களுக்கான பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கிறது. நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்பரீட்சையை இவ்வளவு காலமும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதில் பெரும் சிரமம் இருந்து வந்தது. ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் முப்பதாம் திகதிவரை இப்பரீட்சையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுமார் அறுநூறு தமிழ் மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்ற இருக்கிறார்கள். மேற்படி பரீட்சையை கண்காணிப்பதற்காக பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து விரிவுரையாளர் குழு ஒன்றும் அனுப்பி வைக்கப்படவிருக்கிறது. கடந்த நாலு வருடமாக இப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தம்மை வெளிவாரி மாணவர்களாகப் பதிவு செய்து கொண்ட தமிழ் மாணவர்கள் பலரும் பேராதனைக்கு சென்றே பரீட்சை எழுதவேண்டிய நிலைமை இருந்தது.

இதனால் அவர்கள் பல அசௌகரியங்களுக்கும் உள்ளானார்கள். வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான மாணவர் சங்கங்களும் கடந்த காலங்களில் இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என கோரிக்கைகள் விடுத்து வந்தன. யாழ்ப்பாணத்தில் பெரும் தொகையான வெளிவாரிப்பட்டப் படிப்பு மாணவர்களை தன்னகத்தே கொண்ட கல்வி நிறுவனமான வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரியின் நிர்வாகம் இப்போராட்டத்தில் முன்னணியில் நின்றது. தமது நீண்ட நாள் கோரிக்கை ஒன்று நிறைவு பெற்றமை குறித்து மேற்படி கல்லூரி நிர்வாகமும் மாணவர் சங்கமும் நமது நிருபரிடம் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் யாழ்ப்பாண பாடசாலைகளில் ஆண்டு ஒன்பது தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரு நாட் கருத்தரங்கு ஒன்று நடாத்த தீர்மானித்துள்ளது.

இக்கருத்தரங்குகள் இம்மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ஆம் தேதி அசிட்டு வெளியிடப் பெற்றது.

### அமைதிப்படைமீது கெரிலாத்தாக்குதல்

## 2 பேர்பலி 6 பேர் படுகாயம்

(பெய்ரூட்)

கடந்த திங்கட்கிழமை தென்லெபனானில் ரோந்து சுற்றிக் கொண்டு வந்த ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படை வீரர்கள் மீது நடத்தப்பட்ட கொரில்லாத் தாக்குதலில் ஐ. நா. அமைதி காக்கும் படையைச் சேர்ந்த நேபாள நாட்டு இராணுவ வீரர்கள் இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஆறு பேர் படுகாயம் அடைந்தார்கள். இஸ்ரவேலின் ஆதரவோடு தென்லெபனானில் இயங்கி வரும் தென்லெபனான் இராணுவ வீரர்கள் தான் தமது அமைதி காக்கும் படை மீது தாக்குதல் நடத்தியதாக ஐ. நா. இஸ்ரவேல் மீது குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் இஸ்ரவேலோ அமைதி காக்கும் படைவீரர்களுக்கும் அப்பகுதியில் நிலை கொண்டு இருக்கின்ற ஹிஸ்புல்லா கெரில்லாக்களுக்குமிடையில ஏற்பட்ட மோதலில்தான் மேற்படி நேபாள வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் கூறியுள்ளது இதனை மறுத்த ஐ. நா. அதிகாரிகள் அப்பகுதியில் ஹிஸ்புல்லா வீரர்களே கிடையாது என்றும் கூறியுள்ளனர்.

## நன்றி

இன்றைய பத்திரிகையில் மூன்றாம் பக்கத்தில் வெளியாகியுள்ள கார்ட்டூன் கடந்த ஞாயிறு வெளியான சண்டே ஒப்சர்வர் பத்திரிகையிலிருந்தும் நேற்றைய பத்திரிகையில் வெளிவந்த படம் தஐலண்ட் பத்திரிகையிலிருந்தும் எடுக்கப்பட்டவை. இரு பத்திரிகைகளுக்கும் கேலிச் சித்திரக்காரர்களுக்கும் எமது நன்றிகள்.

ஆ-ர்.

## மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித யேம்ஸ் வித்தியாலய இல்ல மெய் வல்லுனர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். யாழ் பிரதேச உ. ஆ. உதவி ஆணையாளர் எஸ். திவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி சிவமலர் திவகலாலா வழங்குவார்.

## சமயப் போட்டிகள்

(கொழும்புத்துறை)

மகா வராத்திரி தினத்தை முன்னிட்டுக் கோப்பாய் இந்து இளைஞர் மன்றம் பேச்சு, சமய அறிவுப் போட்டிகளை நடாத்தவுள்ளது. மன்றத் தலைவர் திரு. பொ. விக்னேஸ்வரலிங்கம் இதற்கான சகல ஏற்பாடுகளையும்செய்து வருகின்றார்.

## ஒன்றுபடுத்தும் . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டை நடத்திய ராமமூர்த்தி ஆயுதம் தாங்கிய குழுக்களிடமிருந்து தமிழ் நாட்டு மக்களைப் பாதுகாக்க முன்னேற்பாடாக பாதுகாப்பு நடவடிக்கைகளை போதிய அளவில் மேற் கொள்ளுமாறு தமிழக முதல்வரை கேட்டுக்கொண்டார்.

## நேற்று விடுதலை . . .

2ம் பக்கத் தொடர்ச்சி

(தாழையடி) கொலம்பஸ்(மன்னார்) நிதி(வல்வெட்டித்துறை கண்ணன் (நீர்வேலி) அமிர்தராஜ் (வட்டுக்கோட்டை) சிறி (ஆனைக்கோட்டை)சிங்காரம் (உடுவில்) அரவிந்தன் (வட்டுக்கோட்டை) கிட்டு (தெல்லிப்பழை) வாசு (மாதகல்) செல்லையா (கரவெட்டி) மகேந்திரராசா (புன்னாலைக்கட்டுவன்)மகேந்திரராசா(நாவற்குழி)நந்தகுமார்(சுழிபுரம்) கமலதாசன்(பண்டைத்தரிப்பு) ஜெயராசா(பண்டைத்தரிப்பு) பாலசிங்கம் (கரவெட்டி) சந்திரகுமார்(சாவகச்சேரி) விஜயராசன் (யாழ்ப்பாணம்) சிவஞானம்(வட்டுக்கோட்டை) ஜெயராசசிங்கம் வட்டுக்கோட்டை) கணேசலிங்கம் (கரவெட்டி) விஜயகாந்தன்(கொழும்புத்துறை) கருணாகரன் (கரவெட்டி) மதிராஜ்(தொண்டைமானாறு)அதிசயராஜன்(யாழ்ப்பாணம்) சிவராசா(பண்டைத்தரிப்பு) நித்தியானந்தம் (பொலிகண்டி) காண்டீபன் (வல்வெட்டித்துறை) ஜீவா (குருநகர்) ஜெயசந்திரன்(வல்வெட்டித்துறை)

## மாநகரசபை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்ளப் பட்டது. மீதி ஆறுகோடி எண்பது லட்சம் ரூபாவும் நிலுவையில் உள்ளதாகவும் இந்த வருடத்திற்கென இரண்டு கோடி ரூபாய் இலங்கை நாணயம் அபிவிருத்திக்கென யாழ். மாவட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மாகாணசபையின் அசட்டைத்தன்மை காரணமாக இது தடைப்பட்டுள்ளதாகவும் அறியக் கூடியதாக இருக்கிறது.

(லோ)

## தொண்டர்கள் தொண்டு

(கொழும்புத்துறை)

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை சைவத் தொண்டர்கள் தொண்டர் சேவைசெய்ய உள்ளார்கள். இதற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் மாவட்ட சைவநெறித் தொண்டர் கழகம் மேற்கொண்டு வருகின்றது. கடந்த பல வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட நிலைமை காரணமாக இச்சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுப் புதிதாகத் தொண்டர் இருபாலாரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப்புதிய ஆண், பெண் தொண்டர்களுக்கான தொண்டர் வகுப்பு கடந்த வாரம் யாழ். திருநெல்வேலி சைவத்தொண்டர் நிலைய அமைப்பாளர் திரு. இ. சுவாமிநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

## வடமராட்சியிலிருந்து வெளியேறுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக்குடா நாட்டிலிருந்து அமைதி காக்கும் படையினது வெளியேற்றத்தின் மூன்றாம் கட்டமாக வடமராட்சியிலிருந்து வெளியேற ஆரம்பித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை, வியாபாரி மூலை. வல்லிபுரக் கோயில் பொலிகண்டி ஆகிய பகுதிகளிலிருந்து தமது முகாம்களை மூடிவிட்டு வெளியேற ஆரம்பித்த இந்தியத் துருப்புக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நெல்லியடி, கலிகை' யாக்கரை ஆகிய பகுதிகளில் உள்ள தமது முகாம்களை மூடிவிட்டு வெளியேறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்கிடையில் கடந்த திங்கட்கிழமை நெல்லியடியில் புலிக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

## தனியார் மயப்படுத்தல்

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயல்படுத்த முனைந்து நிற்கின்றது. இதனால் பல உயிரைத் தியாகம்செய்து தோட்டத் தொழிலாளர்கள் பெற்ற அத்தனை உரிமைகளையும் இழக்கும் அபாயம் தோன்றி இருக்கிறது எனக் குறிப்பிட்ட செல்லச்சாமி இத்தகைய நவீன அடிமைத்தனத்துக்கு எதிராக தாம் சார்ந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது கண்டனத்தை இலங்கை அரசுக்குத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

## பிரேமதாசா

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டிருக்கிறது. முதல்வர் இலங்கை அரசின் சட்டதிட்டங்களை மீறினார் என்று குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

சென்னையில் ஈழத் தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய முதல்வர் கருணாநிதி ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ் ரெலோ ஆகிய கூட்டணியினர் தாங்களாகவே பதவிகளை ராஜினாமாச் செய்து வடக்கு கிழக்கு மாகாணசபை ஆட்சியை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கலாமென்று யோசனை தெரிவித்ததாகவும் செய்திகள் அறிவித்தன.

## மாகாணசபை கூட்டில் வந்த பிளவு

தேசிய முன்னணி என்ற பெயரில் அமைந்திருந்த கூட்டமைப்பிலிருந்து ஈ. பி. ஆர். எல். எவ். சமீபத்தில் விலகிக் கொண்டதாலும் வடக்கு கிழக்கு மாகாணசபை ஸ்திரமற்றுப் போய்விட்டதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## முதல் முதல் சந்திப்பு

இவை யெல்லாவற்றையும் விட இந்திய அமைதிப் படை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேறியபின் இப்பகுதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் சட்டம் ஒழுங்கினை நாட்டுவது சம்பந்தமாகவும் இலங்கை அரசு ஒரு தீர்க்கமகன முடிவு செய்ய முடியசீமலுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலு இலங்கைப் பொலிசாரையும் இலங்கை இராணுவத்தையும் அனுப்புவதினால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றியும் இலங்கைஅரசுமுயற்சித்து வருகிறது

இந்தச் சூழ்நிலையிதான் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தையா என்ற மகேந்திரராஜர்வும் ஜனாதிபதி பிரேமதாசாவும் நபளை சந்தித்துப் பேசவிழிக்கின்றனர்.

தமிழீசி விடுதலைப் புலிகள் இயக்கம் மக்கள் முன்னணி என்ற தபயரில் அரசியல் கட்சியாகப் பிரகடனப் படுத்தப்பட்டபின் அதன் தலைவர்ான மாத்தயா என்ற மகேந்திரராஜா நாளைதான் முதல் தடவையாசுச் சந்தித்துப் பேசபிருக்கிறாரென்பதும் குறிப்பிடத்தக்கது.

## விஞ்ஞானபீட பரீட்சைகள்

(கொழும்புத்துறை)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சைகள் பங்குனி மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமாக உள்ளது.

இதேவேளை விஞ்ஞானபீட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் வைகாசி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## நள்ளிரவில் நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரின் மையப் பகுதியில் பொது மக்களின் சனநடமாட்டம் நள்ளிரவு 12 மணி வரை அதிகரித்துக் காணப்படுகின்றன. தேனீர்க்கடைகள் திறந்திருக்கின்றன. வாகனப் போக்குவரத்து இடம்பெறுகின்றன. பல இடங்களிலும் வேலை செய்யும்மக்கள் நகரின் மத்திக்கு வந்துதேனீர் அருந்திவிட்டுச் செல்வதைக் காணக் கூடியதாயுள்ளது.

1987 ம் ஆண்டு இந்தியஇராணுவம் யாழ் நகரில் நிலைகொண்டபின் இரவு நேரங்களில் இவ்வாறானதொரு சுமுகமான சூழ்நிலை இப்போது தான் உருவாகியுள்ளதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

## கச்சேரியில் வங்கிக் கிளை

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரியில் மக்கள் வங்கிக் கிளை கடந்த பல வருடங்களாக இயங்கவில்லை. இதனால் மக்கள் சிரமப்பட வேண்டியுள்ளது. இது பற்றி யாழ். செயலக வட்டாரங்களில் கேட்கப்பட்டபோது விரைவில் இது பற்றிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நம்புவதாக தெரிவிக்கப்பட்டது.